1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.


# சத்திய வேத பாதுகாவலன்


REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.


"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"


80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 41-ம் இலக்கம்


## அடுத்தஞாயிறு (23-10-55) விசுவாசப் பரப்புதல் ஞாயிறு

### சுதேச வர்த்தமானம்

#### காலநிலை

இடையிடையே சிறுகமழைபெய்து கொண்டுவருகின்றது. இளம்பயிர்களுக்கு இது மிக வாய்ப்பானதென்று சொல்லப்படுகிறது.

#### எக்கருக்கு 101 புசல்

தம்பலகாமம்வடக்குக் கிராமவிதானையாரான திரு. ஐ. கந்தையா அவர்கள் அங்குகோவிலாற்றுப் பாய்ச்சலிலுள்ள ஐந்து சூட்டுப்பகுதியெனும்வயலை இம்முறை பின்மாரிவேளாண்மைச் செய்கையின்போது ஐப்பானியமுறைப்படி புதியமுறையிலே நாற்றுநட்டுச் செய்கைபண்ணினர். அதன்விளைவாக எக்கருக்கு 101 புசல்நெல் வீதம் விளைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

#### புதிய சமாதானநீதவான்

பலாலிதெற்கு, திரு. வி. இராசநாயகம்அவர்கள் யாழ்ப்பாணப் பிரிவுக்கு ஜே. பி. எனப்படும் சமாதானநீதவானாக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கிறார் என அறிகின்றோம். இவர் மயிலிட்டிக்கிராமச்சங்கம், கிழக்குமயிலிட்டிப்பற்று ஐக்கியவிளைபொருள் விற்பனவுச்சங்கம், வலிகாமம்வடக்குக் கிராமமுன்னேற்றசங்க சமாஜம், பலாலி – வயாவிளான் கிராமமுன்னேற்றசங்கம் ஆதியவற்றின் தலைவராவர். பிரபல சமூகதொண்டரான இவர் ஓர்தமிழ்ப்புலவராகவும் விளங்குகின்றார்.

#### நன்கொடையாகக் கண்கள்

ஒருவர் தான் இறந்தபின் தனதுகண்களைப்பிறரில் பொருத்துமாறு அன்பளிப்புச்செய்யச் சட்டமுறையான அனுமதி அருளப்படவேண்டுமென்று சுகாதாரமந்திரியார் திரு. ஈ. ஏ. நுகவெலஅவர்கள் கொண்டுவந்துள்ள ஓர்பிரேரணையை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. இதற்கான புதியசட்டமொன்றைச் சுகாதாரமந்திரியார் விரைவிலே பாராளுமன்றத்தில் பிரேரேபிக்கவிருக்கின்றார். கண்களைப்பொருத்தும் சிகிச்சைக்குப் போதியகண்கள் தற்போதில்லை. ஆஸ்பத்திரியில் இறந்தஅநாதைகள், தூக்கிவிடப்பட்ட கைதிகள் ஆதியோரின்கண்களே இப்போது பெறக்கூடியனவாய் இருக்கின்றன. இவைகள் போதாவென வைத்தியபகுதி முறையிட்டிருக்கின்றது.

#### பேச்சுப்போட்டி—நெடுந்தீவு

வித்தியாபகுதியாரால் நடாத்தப்படும் 'மதுவிலக்கு' விஷயம்பற்றிய பேச்சுப்போட்டி நெடுந்தீவு அரசினர் பாடசாலையில் 18-10-55 முற்பகல் நடைபெற்றது. இதிலே நெடுந்தீவிலுள்ள பலபாடசாலைகள் பங்குபற்றின. நடுக்குறிச்சிக் கத்தோலிக்க ஆண்பாடசாலைச் சிரேஷ்டவகுப்புமாணவர் அ. யுவானிஸ் முதலாவதாகத்தெரியப்பெற்றனர்.

— நிருபர்.

#### இருமடங்கு நெல்விளைவு

வடமேல்மாகாணத்திலுள்ள கமக்காரர் யந்திரக்கலப்பைகள் உபயோகிக்கும்முறையைக் கையாண்டு வருகிறார்கள். அதனால்அவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் உணவைப்பெறும் நிலைமைக்கு விரைவிலே வந்துவிடுவார்கள் போல் தெரியவருகிறது. முன்னர் அதிகம்பலன்தராதிருந்த வயல்களிலெல்லாம் ஐப்பானியமுறையைக் கையாண்டதாலே அதிகநெல்விளையத் தொடங்கியிருக்கிறது. இவ்வருடம் அங்கே சென்றமுறையிலும் இருமடங்குநெல் விளைந்திருக்கிறது. சிறந்தமுறையிலே நெற்பயிர் செய்கைபண்ணி அதிகமான நெல் விளைவிப்பாருக்குப் பரிசில்களும் வழங்கப்படுகின்றன.

#### சிங்களம் - இறந்துபடமாட்டாது

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் சென்றவியாழக்கிழமை அதிகாரபூர்வமாக மினுவாங்கொடைக்கு முதன்முதலாக விஜயஞ்செய்து, அங்கு கூடியிருந்த பிரமாண்டமான ஓர் சனக்கூட்டத்தில் பேசியவிடத்து: ஸ்ரீலங்காவைச் சுபீட்சமடையச் செய்யுமாறு இந்நாட்டிலுள்ள ஒவ்வோர்பிரசையும், ஒவ்வோர் அரசாங்க உத்தியோகஸ்தரும், ஒவ்வோர் அரசியல்வாதியும் தனது கடமையைச் செய்யும்படியாக மனுப்பண்ணிக்கொண்டார். மொழிப்பிரச்சினைபற்றி அவர் குறிப்பிட்டபோது, சிங்களத்தை அரசாங்கமொழியாக ஆக்குவதற்கான கூச்சலெழுந்திருக்கிறது; சிங்களப்பாஷை போர்த்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர்களின் ஆட்சிகாலங்களிலே இறுதிகாணாது சிரஞ்சீவியாக வாழ்ந்துவிட்டது; அங்ஙனமாகக் கொத்தலாவல ஆட்சிகாலத்திலே ஏன் அதுஇறந்துபடவேண்டுமென்பதற்கான நியாயம் எதுவுமில்லை; அத்தகைய நடவடிக்கைஎதுவும் எடுக்கப்படாதபோதிலும் சிங்களப்பாஷை தன்னைத்தானே பரிபாலித்துக்கொள்ளும் எனக்கூறலாயினர்.

#### கல்லூரிப் பரிசளிப்பு விழா

சம்பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா சென்ற 15-ந் திகதி சனிக்கிழமைமாலை வழமைபோலச் சம்பிரமமாக நடந்தேறியது. குருப்பிரசாதிகளும், பழையமணவர்களும், பெற்றோரும், பிரமுகர்களும், அபிமானிகளுமாகப் பொருந்திரளானோரால் மண்டபம்தேங்கியிருந்தது. இலங்கைச் சர்வகலாசாலைப் பேராசிரியரும், கல்லூரிப் பழையமாணவர்களில் ஒருவருமான திரு. மயில்வாகனம்அவர்கள் விழாவிற்குத் தலைமைவகித்தனர். அவர்பாரியார் மாணவர்களுக்குப் பரிசில்களைவழங்கினர். கல்லூரி அதிபர் வண. எஸ். என். அருள்நேசன் சுவாமியவர்கள் அனைவரையும் வரவேற்றபின் அருமையான பலஅம்சங்களை அடக்கியிருந்த வருடாந்தஅறிக்கையை வாசித்தார். அதலைவர்உரையின்பின் பரிசில்கள் வழங்கப்பட்டன. அதன்மேல் ஆங்கிலத்திலும், தமிழிலுமாக ஹாஸ்யம்தேங்கிய இருநாடகங்கள் மாணவர்களால் நடிக்கப்பெற்று விழா இனிதே நிறைவாயிற்று.

#### வத்திக்கானுக்கு அன்பளிப்பு

கொழும்புநகரிலே ஓர்இளைப்பாறிய பிரக்கிராசியாரும், தற்போது இங்கிலாந்திலே கென்ற்நகரில் சஞ்சரித்து வருகிறவருமான திரு. லெஸ்லி டி சேறம்அவர்களால் வத்திக்கானுக்கு ஆனைத்தந்தங்கள் கொண்டுசெய்த விலையுயர்ந்த திருச்சுரூபங்களின் அன்பளிப்பொன்று இரண்டாம்முறையாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஓர்சிமிளையும், கன்னிமரியாயின் திருச்சுரூபங்கள் இரண்டையும்அடக்கிய இந்தஆனைத்தந்தஅன்பளிப்பு சென்றவாரம் சிலாபநகர் மேற்றிராணியாரான மகாவந். எட்மன்ட்பீரிஸ்ஆண்டவரால்லண்டனிலிருந்து றோமாபுரிக்குக் கொண்டுபோகப்படலாயிற்று. திரு. டி சேறம் அவர்கள் அபூர்வமாகச் சேகரித்துவைத்திருந்த இவைகள் வத்திக்கான் நூதனபொருட்காட்சிச்சாலையிலே வைக்கப்படவிருக்கின்றன. இவர் 1947-ம்ஆண்டிலும் வத்திக்கான் நூதனபொருட்காட்சிச்சாலைக்கு விலையுயர்ந்த ஓர் அன்பளிப்புச் செய்திருந்தார். அதுவும் ஆனைத்தந்தங்கொண்டு செய்த கன்னிமரியாயின் திருச்சுரூபங்களை அடக்கியதாகும். 17-ம், 18-ம் நூற்றாண்டுகளைச்சேர்ந்த இந்து போர்த்துக்கேய சித்திரக்கலையின் தலைசிறந்த பிரதிரூபங்களென அவைகள் வர்ணிக்கப்படுவனவாகும்.

#### திரு. சி. எஸ். நாயகம் அவர்கள்

இளவாலை, பத்தாவத்தைவாசரும், மலாய்நாட்டிலே ஜோகூரைச்சேர்ந்த கெம்பாஸ்எனுமிடத்தில் ஸ்றேஷன் மாஸ்றராய் இருந்துவருகிறவருமான திரு. சி. எஸ். நாயகம்அவர்கள் தமது புதல்வியின் திருமணத்தைமுன்னிட்டு நேற்றுப்புதன்கிழமைகாலை யாழ்ப்பாணம் வந்திருக்கிறாரென அறிகின்றோம்.

#### பஸ்காரர்களின் கலகம்

யாழ்ப்பாண மத்திய பஸ்கம்பெனிக்கும், வடபகுதி ஓம்னிபஸ்கம்பெனிக்கும் சொந்தமான இருபஸ்கள் சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பெருந்தெருவில் மோதுண்டுஏற்பட்ட விபத்தைத்தொடர்ந்து அன்றுமாலை பெரியகடை பஸ்நிலையத்திலே இருகம்பெனிகளையுஞ்சேர்ந்த ஆட்களுக்கிடையே பெரும் கலகமொன்று நடைபெறலாயிற்று. அதிலேசுமார் ஐம்பதுவாள்களும், பக்கத்திலுள்ள கடைகளிலிருந்து எடுக்கப்பட்ட போத்தல்களும் உபயோகிக்கப்பட்டன. அதனால் மூன்றுபஸ்கள் சேதமடைந்தன. அநேகர் காயமடைந்தார்கள். நிலைமை கட்டுக்கடங்காமற் போயினமையாலே பொலிசார் துப்பாக்கிப்பிரயோகஞ் செய்தார்கள். இக்கலவரத்தில் ஏறக்குறையப் பன்னிருவர் காயமடைந்தனர். மறுநாள் இருகட்சிகளும் சமாதானமாகவே நகரபஸ்சேவை மறுபடியும் ஆரம்பமாயிற்று. ஆனால், கலகத்தில் சம்பந்தப்பட்ட 23 பஸ்காரர்கள் கைதுசெய்து இருமுறை விளக்கமறியலில் வைக்கப்பட்டபின் சென்றசெவ்வாய்க்கிழமை ஆயிரம்ரூபாபிணையில் விடப்பட்டிருக்கிறார்கள்.

---

● ஜேம்ஸ் காஷ் பென்னி என்பவர் சமீபத்திலே தனது 80-வது பிறந்தபெருநாளைக் கொண்டாடினார். இற்றைக்கு 65வருடங்களின்முன் ஐக்கிய அமெரிக்கதேச மிசூறிநகரிலுள்ள நாட்டுப்பண்டகசாலையொன்றில் இவர் மாதம் 2·27 டலர்சம்பளத்தில் வேலைசெய்துவந்தார். இப்போதோ ரெக்சாஸைச் சேர்ந்த ஹவுஸ்ரன்நகரிலே தனது 1655-வது உடைப் பண்டகசாலையைத் திறந்திருக்கிறார். சங்கிலித் தொடர் போன்று இவருக்குச்சொந்தமாயுள்ள உடைப்பண்டகசாலைகள் சென்ற அரசிறைவருடத்தில் 10 கோடியே 90 லட்சம்டலர் பெறுமதியான சாமான்களை விற்றிருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தைக்கு விருந்தாகும் சுத்தவாளரின் சரிதங்கள்

—: ஆசிரியர், எல். பாக்கியநாதர் :—

(முன்தொடர்ச்சி)

அர்ச். லொயலா இஞ்ஞாசியார் இரண்டுவிசேஷ வரங்களுக்காக இடைவிடாது செபித்துவந்தார். தேவதிருவுளத்திற்குத் தம்மைமுழுதுந் தத்தம்பண்ணுவதே அவரின் முதலாவது அபிலாஷை. உலகத்துடன் ஒட்டிவாழாது ஓடும்பழமும்போல் வாழ்வதே இரண்டாவது ஆவல். "உமதுசித்தப்படியே அல்லாது என்சித்தப்படியல்ல" என்று மனுமகன்செய்த செபத்தையே இந்தச்சுத்தவாளனும் செய்தார். இதனிலுஞ் சிறந்தசெபத்தை எவர்தான் செபிக்கமுடியும்?

அர்ச். கொன்சாகா ஞானப்பிரகாசியார் வாலரின்வழிகாட்டி. பெற்றோரால் போற்றிவளர்க்கப் பட்டவர். அவர் பரிசுத்தத்தில் பக்குவநிலை அடைய அவரின் பெற்றோரே காரணர். 'யேசுமரி' என்ற ஒப்பற்ற இருசொற்களையும் அவர் பெற்றோரிடமிருந்தே பயின்றவர்.

அர். பிரான்சீஸ் சலேசியார் தாய் வயிற்றிலேயே தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர். இவர் வளர்ந்தபின் யேசுவின் திவ்வியஇருதயத்திற்கு ஓர் அழகிய செபத்தைச்சொன்னார். "உம்முடைய இருதயம் எங்கள் இருதயங்களில் என்றும்வாழட்டும்; உம்முடைய இரத்தம் எங்கள் ஆத்துமத்தின் இரத்த நரம்புகளில் என்றும்ஓடட்டும்; ஓ! எங்கள் இருதயங்களின் சூரியனே! உமது நன்மைத்தனத்தின் சுடரினால் எல்லாப் பொருள்களுக்கும் நீர் உயிர்கொடுக்கிறீர்" என்று செபித்து, யேசுவின் திவ்வியஇருதயம் உயிர்ச்சுடர்விட்டெரியுஞ் சூரியன் என்று சித்திரிக்கிறார்.

லூர்துகெபியில் தேவதாயின் தரிசனத்தால் சிறப்புப்பெறுபவள் அர்ச். சின்னப் பெர்னதேத். இவள் சிறுமியாய்இருக்கும்போது சின்னக் குறிப்பிடத்திலுள்ள செபங்களைமுதலாய் மனனஞ்செய்யாதவள். இவள் உலகத்தைத்துறந்து ஓர்கன்னியாஸ்திரீயாய் இருக்கும்போது ஒருசெபத்தைச் சொன்னாள். 'ஓ, என் ஆண்டவா! என் இரத்தம் உமக்காகச் சிந்தப்படாவிட்டாலும், என்சீவன் உமக்காக ஒப்புக்கொடுக்கப்படா விட்டாலும் உமக்கு விருப்பமில்லாத எதன்மட்டிலும் நான் இறந்துபோக எனக்குக் கிருபைசெய்யும்" என்று வாக்காலங்காரத்துடன் வேண்டிக்கொண்டாள்.

இவ்வாறாகவே சுத்தவாளர்செபித்தனர். உலக துன்பதுயரத்திலுஞ் செபித்தனர். இன்பவேளையிலுஞ் செபித்தனர். எல்லாவற்றிலும் தேவனின்மகிமையையேதேடிவந்து, அதன் பேறாய்த் தங்கள் மகிமையையின் முடியை அடைந்துகொண்டனர். இவர்களுக்கும், எங்களுக்கும் ஒருவித்தியாசம் மாத்திரம்உண்டு. இவர்கள் ஓர்இரகசியத்தை நன்றாக அறிந்துகொண்டனர்' நாம்ஒருவேளை அதையறிந்திருந்தாலும் அறியாதவர்கள்போல் நடந்துகொள்ளுகிறோம். அவர்கள்சீவியத்தில் ஒவ்வொருகணமும் அது இரவாயிருக்கலாம் — அன்றேல் பகலாயிருக்கலாம்— இன்பவேளையாய்இருக்கலாம் — அன்றேல் துன்பவேளையா யிருக்கலாம் — வாலிபப்பிராயமா யிருக்கலாம் — அன்றேல் வயோதிபப்பிராயமா யிருக்கலாம். தேவனுடன் ஒன்றித்திருந்தனர். தேவனுடன்ஒன்றித்துத் தமதுஒவ்வொரு கிரிகையையுஞ் செபமாகமாற்றினர். இச்செபமே அவர்கள் இக்கண்ணீர்க்கணவாயில் கலங்காமல் காப்பாற்றியது; அவநம்பிக்கையில் ஆழ்ந்துபோகாமல் அபயங்கொடுத்தது.

மனிதன் ஒருவனுக்குச் 'சம்மனசு' என்று அடைமொழி கொடுக்கப்பட்டதாயின் அது அக்குயினுதோமையாருக்கே. அக்குயினுதோமையார் சம்மனசு, வேதபாரகர்என்று சிறப்பிக்கப்படுபவர். சிறந்தபக்தர். நிறைந்தகலைஞர். எத்தனையோ சிறந்தசெபங்களை ஆக்கியவர். தேவநற்கருணை ஆசீர்வாதத்தின்போது நாமெல்லோரும்பாடித் தேவனைத்தோத்திரிக்கும் "தாந்தும் எர்கோ" என்ற பாக்களைப்பாடியவர் இவரே. "பாஞ்செலிங்குஅ" என்ற பத்திரசம்பொழியும் பாடலின் கடைசிப்பாக்களே இவைகள்.

"இத்தகைய நற்கருணைக்கு
உத்தமதோத்திரம் புரிவோம்
முத்தர் பூர்வஆசாரம் நீங்குக
நற்புதிமறை நேர்மையாய்
சத்தியற்ற புலனை ஆதரித்துக்காக்க
விசுவாசமே"

"சனித்தவர்க்கும்சனிக்கப்பட்டவர்க்கும்
தோத்திரப் புகழ்ச்சியும்
கனத்தமங்கள மகிழ்ச்சியும்
ஆகக்கடவது இருவரின்
மனதில்தோன்று இஸ்பிரீத்துவுக்கும்
இவ்வண்ணம் ஆருகஎன்றுமே"

என்பவையே அவ்விருபாடல்களும்.

அப்போஸ்தலரான அர்ச். தோமையார் ஒருசந்தேகப்பேர்வழி. துர் அதிர்ஷ்டசாலிஎன்று சொல்வதும் சிறப்பாக அவருக்குப்பொருந்தும். கிறீஸ்துநாதர் உயிர்த்தார் என்பதை ஏற்றுக்கொள்ளஅவர்மறுத்துவிட்டார். "நான் அவருடைய கரங்களிலே ஆணிகள் அறைந்த துவாரத்தையுங் கண்டு, ஆணிகள்இருந்த இடங்களிலே என்விரலையும்விட்டு, அவருடையவிலாவில் என்கையையும் இட்டாலொழிய விசுவசிக்கமாட்டேன்" என்று திட்டமாகக் கூறிவிட்டார்.

விசுவாசிகள் என்றவகையில் அப்போஸ்தலரான அர்ச். தோமையாரையும், அர்ச். அக்குயினு தோமையாரையும் ஒப்புநோக்குவோம். நற்கருணைநாதரை நமஸ்கரித்துக்கொண்டிருக்கின்றார் அக்குயினுதோமையார். அப்போஸ்தலரின் விசுவாசக்குறைவு அவர்முன் காட்சியளிக்கின்றது. அப்போஸ்தலரின்குறைவைத் தாம் உடனுக்குடனே நிறைவுசெய்கின்றார்.

"காயங்கண்டு தோமாஸ் தேவன் என்றார். காயம்இல்லை, ஆனால், தேவன் கண்டேன்" என்று துதிக்கின்றார். விசுவாசஉச்சாரணஞ் செய்கின்றார். "காணதிருந்தும் விசுவசிப்போர் பாக்கியவான்கள்" என்று திவ்வியகர்த்தரே தோமாசுக்குச்சொன்ன அதேபாக்கியவானுகின்றார் அக்குயினுதோமையார்.

இவரின் விசுவாசஅறிக்கை இவ்வளவில் நின்றுவிடவில்லை. வரம்புகடந்தது இவரின்விசுவாசம். வரம்பைமீறி வழிகின்றது. கல்வாரிமலைக்காட்சி கண்முன்தெரிகின்றது! நீசச்சிலுவையின் சோகக்காட்சி சோபிக்கின்றது! சிலு

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

# அங்கிளிக்கன் சபையின் கஷ்டநிலை

உயர்தர அங்கிளிக்கன்சபைப் பாதிரிமாருள் ஈராயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட 'அனன்சியேஷன்' எனும் குழுவினரின் செயலாளராகிய கனம். உவால்ற்றன் ஹென்று அவர்கள் சென்றமாசம் 7-ந் திகதியன்று கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்டார். தென்னிந்தியசபையை ஏற்றுக்கொள்வதென அங்கிளிக்கன்சபை சமீபத்தில் செய்துள்ளதீர்மானமே இக்குழுவைச் சேர்ந்தவர்களின் மனவேறுபாட்டிற்குக் காரணமாயிற்று. கனம். உவால்ற்றன் அவர்கள் தமது குழுவைவிட்டு வெளியேறியது, அக்குழுவினருள் ஏற்பட்டுள்ள மனக்கசப்பை வெளிப்படையாகக் காட்டுகிறது.

சென்றசிலவாரங்களுள் கத்தோலிக்க திருச்சபையில்சேர்ந்துகொண்ட அங்கிளிக்கன் சபையாருள் கனம். உவால்ற்றன் அவர்கள் நான்காவது பாதிரியார் ஆவர். இவரைத்தொடர்ந்து இன்னும் பலர் கத்தோலிக்கதிருமறையின் சத்தியங்களைப் படித்துக்கொண்டிருக்கின்றனர். தாம் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்வதற்குமுந்தியநாள் சாயந்தரம் கனம். உவால்ற்றன் அவர்கள் ஓர் அறிக்கைவிடுத்தார். அதிலே அவர் "சென்றஆடிமாசம் நடந்தேறிய இங்கிலாந்துச்சபையின் பாதிரிமார் சமாஜம் தென்னிந்தியசபையை ஏற்றுக்கொள்வதெனச்செய்த தீர்மானம் இங்கிலாந்துச் சபையிலே அங்கலாய்ப்பையும், தடுமாற்றத்தையும் உண்டாக்கியது; இந்த மாற்றம் இப்போது வெளியேகாணப்படுவதிலும் எவ்வளவோகூடிய காத்திரமானது; ஆயின் சமீபத்தில்வெளியிடப்பட்ட சிலஅறிக்கைகள் மிகைபடக் கூறுகின்றன; யான் அறிந்தவரையில் யான் எடுக்கும் நடபடிக்கையை இன்னும்அநேகர் எடுப்பர்; என்னைப்பின்பற்றி இன்னும்அநேகர் பின்வருவர் என்பதில் எனக்குஐயமில்லை" என்று தெரிவித்திருக்கிறார்.

தமது வருங்காலத்தைப்பற்றி நிர்ணயிக்குமாறு இந்தக்குழுவினர் அடுத்த மாசம் கூட்டங்கூடுவர். இங்கிலாந்துச் சபையுடன் ஒன்றாய்இயங்குவது இயலாக்கருமமாகுமென அநேகர் அபிப்பிராயப்படுவர்.

லண்டன் அங்கிளிக்கன் சபையின் பெயரையே இந்தக்குழுவினர் தமக்குச் சூட்டிக்கொண்டனர். இக்குழு 1951-ம்ஆண்டு ஆரம்பமானது. சமய அநுசாரங்களை அனுட்டியாதவருடன் ஐக்கியப்படுவதிலே இங்லாந்துச்சபையில் ஏற்பட்டபிளவுகாரணமாக இங்கிலாந்துச்சபைப் பாதிரிமார் சேர்ந்து இக்குழுவை ஆரம்பித்தனர். இக்குழுவினருள்பெரும்பாலானோர் அங்கிளோ–கத்தோலிக்கராவர்.

## காத்திரமான செய்கை

தென்னிந்தியசபையில் நடந்தேறும் குருத்துவபட்டமளிப்பு, மேற்றிராணித்துவ அபிஷேகம் என்பவற்றை இங்கிலாந்துச்சபையினர் சென்றஆடி மாசத்தில் நடந்தசமாஜத்தில் ஏற்றுக்கொண்டதை இக்குழுவினர் பெரும் பாரதூரமான செயலாகக்கருதினர்.

மெதடிஸ்ற்சபைகளும், பிறெஸ்பிற்றேறியன் சபைகளுமாகச்சேர்ந்து தென்னிந்தியசபையில் நாலுஅங்கிளிக்கன் மேற்றிராசனங்கள்உண்டு. பல சபைகளும்சேர்ந்து ஒன்றுபட்ட இந்த ஐக்கியம் இப்போதும் பரிசீலனைப்பருவத்திலேயே உள்ளது. இன்னும் 22 வருடங்களுக்கு இதைப்பற்றி இங்கிலாந்துச்சபை எவ்விதநடபடிக்கையும் எடுக்கமுடியாது.• அப்படியிருப்பவும் உயர்தர அங்கிளிக்கன்சபைப் பாதிரிமார் இதுவரையும்நடைபெற்றவைகள் திருப்தியானவை எனக்கொண்டு இவ்விதமாக நடந்துகொண்டனர். இங்கிலாந்துச்சபை கத்தோலிக்கசபையைப்போல் அப்போஸ்தலரிடமிருந்து தொடர்ந்துவருவதாக நம்பிக்கொண்டிருக்கிறது. இதுவிடயத்தில் கனம். உவால்ற்றன் அவர்களின் அபிப்பிராயமாவது:

"தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரே சபையின் ஒற்றுமையிலிருந்து பிரிந்து, ஒருஅப்போஸ்தலிக்க கிளைச்சபை என்று உரிமைபாராட்ட இங்கிலாந்துச் சபைக்கு அருகதைஇல்லை. அதற்குச் சமீபத்தில் தென்னிந்தியாவிலும், ஏனைய இடங்களிலும் நடந்தசம்பவங்கள் எடுத்துக்காட்டாகும்.

"தென்னிந்தியசபையின் பிரமாணங்கள் மிகத்தெளிவாய்க் கூறுகிறபடி, அச்சபை மேற்றிராணித்துவத்தை ஏற்றுக்கொள்வது அப்போஸ்தலிக்க தொடர்புடையதாய் இருக்க அல்ல, ஆனால், பலபுறொட்டெஸ்தாந்தசபைகளின் ஒற்றுமையை ஆக்குவதற்கேயாம்.

"சமயாசாரப் பிரஷ்டரின் சந்ததியாராய் மேற்றிராணித்துவ அபிஷேகமின்றி பட்டங்கொடுக்கப்பட்ட பாதிரிமார் இப்பிரமாணங்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்.

"இவற்றிலிருந்து இச்சபையில் மேற்றிராணித்துவம் பிரதானமானதாகக் காணப்படவில்லை.

"அங்கிளிக்கன்சபைப் பட்டங்கள் செல்லுபடியாகாதெனப் பரிசுத்தபாப்பரசர் 13-ம் சிங்கராயர் விடுத்தபிரகடனத்தின் உண்மையை இவைகள் உருசுப்படுத்துகின்றன.

"ஒன்றுக்கொன்று எதிரிகளான பலகிறீஸ்துவசபைகளை ஒன்றாக்கமுனைந்திருக்கும் சர்வசமயஇயக்கம் வரவேற்கப்படல் வேண்டும். கிறீஸ்துவ பிறசிநேகப்படி இம்முயற்சி நன்னோக்கமுடையது.

"ஆனால், இது கத்தோலிக்க ஒற்றுமைஅல்ல. இந்தஒற்றுமை வேறநேக வில்லங்கங்களைக் கொண்டுவரும்.

"கிறீஸ்துவத்தின் இரு விசுவாச உண்மைகளைத் தென்னிந்தியாவில் ஏற்றுக்கொள்ளுகின்றனர். மூன்றுவதை ஏற்றுக்கொள்வதில்லை.

"இப்படியான விசுவாசஅடிப்படையிலேயே இங்கிலாந்துச்சபை இந்தஇருபதாம்நூற்றாண்டில் சர்வசமய இயக்கத்தை ஆதரிக்கின்றது. ஆயின் அது ஆதியில் விட்டுப்பிரிந்த கத்தோலிக்க சபையின் உண்மைகளிலிருந்து விலகிநிற்கின்றது."

கனம் உவால்ற்றன் அவர்கள் பிறிமேசன்சபை இயக்கத்தையும், அது இங்கிலாந்துச்சபையில் கலந்துகொள்வதையுங் கண்டித்து அநேகநூல்கள் எழுதியுள்ளார். இவர் லண்டன் இராணிவாயில் அர்ச். அகுஸ்தீனார்ஆலயத்தின் உதவிப்பாதிரியாராய் இருந்தவர். இன்னும் அநேகஆலயங்களில் இதே பதவியைவகித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பாப்பரசரும் பாகிஸ்தானும்

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பெருவெள்ளப் பிரவாகத்தாலே பதினாயிரக்கணக்கான மக்கள் பெருங் கஷ்டத்துக்குள்ளாய்த் தவிக்கின்றார்கள். அவர்களின் கஷ்டநிவாரணத்திற்கெனப் பரிசுத்தபாப்பரசர் 10,000டலர் அனுப்பி வைத்திருக்கின்றார். இதிலே 5,000டலர் பாகிஸ்தான் பிரதமரிடம் கையளிக்கப்படும். மீதியான 5,0(0 டலரும் தத்தம் மேற்றிராசனங்களிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வாடுகின்ற மக்களின் கஷ்டங்களைச் சாந்திபண்ணுவதற்குப் பயன்படுத்துமாறு கிழக்கு-மேற்குப் பாகிஸ்தானிலுள்ள அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களிடம் கொடுக்கப்படும். பாகிஸ்தானிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டமக்களுக்குப் பரிசுத்தபிதா தொடர்ந்துஉதவியளித்த மூன்றாவதுவருடம் இதுவாகும். 1953-ம் ஆண்டு அவர் 10,000 டலரும், 1954-ம் ஆண்டு 20,000 டலரும் நன்கொடைகளாக அனுப்பிவைத்துள்ளார்.

## அந்தமான்தீவும் கத்தோலிக்கரும்

27வருடகாலம் இந்தியாவிலே தொண்டாற்றியுள்ளவரான யேசுசபையைச்சேர்ந்த வண. எவ். ஏ. வெறெல்ஸ்றசுவாமியார் அந்தமான் தீவுகளில் வசிக்கும் கத்தோலிக்கரை ஞானவிசாரணைசெய்து அங்கே திருவூழியம் புரிந்துவந்தார். கத்தோலிக்கராய் அநேகாயிரக்கணக்கான இந்தியதொழிலாளிகள் அத்தீவுகளிலே வேலைசெய்துவருகின்றார்கள். சுவாமியார் சமீபத்திலே அத்தீவுகளைவிட்டு அடுத்த கப்பலில் உடனே தானே வெளியேறிவிடுமாறு கட்டளையிடப்பட்டார். அதற்கான நியாயம் யாதொன்றும் கொடுபடவில்லை. ஓர்கத்தோலிக்க குருவானவர் அங்குஇருந்துவர அனுமதிக்க வேண்டுமென்று இந்திய மத்திய அரசாங்கத்துக்கு அந்தமான் தீவுக்கத்தோலிக்கரால் அநேகம் முறை மனுச்செய்துகொள்ளப்பட்டும் அரசாங்கம் இன்னுமே அனுமதியளிக்க வில்லையெனத் தெரியவருகிறது. அதனால், அங்கே ஞாயிற்றுக்கிழமைதோறும் திவ்வியபூசைகண்டு, தேவநற்கருணை பெற்றுவரப் பழகிக்கொண்ட ஆயிரக்கணக்கான கத்தோலிக்கமக்கள் கவலை கொண்டவர்களாய்த் தங்களுக்கு ஓர்குருவானவரை அனுப்பிவைக்குமாறு நஞ்சி நகர் அதிமேற்றிராணியாருக்கு அவசியமனு அனுப்பிவைத்திருப்பதாகத் தெரியவருகிறது. இன்னும் அந்தமான் தீவுகளுக்குத் தமது ஆத்மீகமுறையிலே செல்லக் குருவானவர்ஒருவர் அனுமதிக்கப்படவில்லையாயின் சாதாரணதொழிலாளியாக ஒருவரை அனுப்பிவைப்பதற்கான ஆலோசனை நடைபெறுகின்றது. அவ்வாறு அனுப்பப்படுமிடத்து, அவரே இந்தியாவின் முதலாவது குருதொழிலாளியாக இருப்பார்.

## 27,000 குருமார், பிறதர்மார்........

ஹங்கேரி, செக்கோசிலவக்கியா, லிதுவானியா மற்றும்பால்க்கன் நாடுகளில்மாத்திரம் கம்யூனிஸ்தர்களால் 1,850 சந்நியாச, கன்னிகர் மடங்களுக்குமேல் ஒழிக்கப்பட்டு விட்டனவென்றும், 27,000 குருமாரும், பிறதர்மாரும், கன்னியாஸ்திரீமாரும் நாடுகடத்தப்பட்டும், சிறைவைக்கப்பட்டும், தங்கள் சபைகளிலிருந்து கலைக்கப்பட்டு மிருக்கிறார்களென்றும் வத்திக்கான் வானொலி தெரிவித்திருக்கிறது. 1950-ம் ஆண்டு சித்திரைமாதம் 13-ந்திகதியன்றிரவு செக்கோசிலவக்கியபொலிசர் 220 சந்நியாச ஆச்சிரமங்களையும், வேறு மடங்களையும் திடீரெனவளைந்து கைப்பற்றி அவற்றில் இருந்துவந்த 2,500பேரைக் கட்டாய வேலைத் தொழில்முகாங்களுக்குப் போக்கிவிட்டனர். மூன்றுமாதங்களின்பின் 8,000 கன்னியாஸ்திரீமாரும் அதேகதிக்குள்ளாய்ப் பிந்தத் தொழிற்சாலைகளிலும், கமங்களிலும் வேலை செய்ய அனுப்பப்பட்டனர். இவ்வாறே லிதுவானியாவில் 1,500 பேரும், ருமேனியாவில் 2,150 பேரும், ஹங்கேரியில் 9,000 பேரும், அல்பானியாவில் 350 பேரும் செய்துவிடப்பட்டார்கள்.

## பணமா? கன்னிகாமடமா?

கனடா்தேசகாலெண்டர்எனுமிடத்திலே இற்றைக்கு 21 வருடங்களின்முன் ஒரேபிரசவத்தில்பிறந்த டியோன் பெண்குழந்தைகள்ஐவருள்ளும் மரியேடியோன் எனும் பெண்பிள்ளை வெளிஉலக வாழ்க்கையிலும் பார்க்கக் கன்னிகாமடவாழ்க்கையே சிறந்ததெனத் தெரிந்துகொண்டகாரணமாகத் தனக்கு உரிமையாயுள்ள 2,50,000 டலரையும் தியாகஞ்செய்து விடுவாள்போல் தெரிகிறது. ஐந்து பிள்ளைகளும் பிறந்தபோதும், பிந்த அவர்கள் இளவயதுடையவர்களாய் இருந்தபோதும் அபிமானிகளிடமிருந்தும், அவர்களைப்பற்றிய விளம்பரங்களில் கலந்துவருவாய்தேடிக்கொண்ட வர்த்தக சமுதாயங்களிடமிருந்தும் நன்கொடையாகவும், கைம்மாறுகளாகவும் அவர்கள்பெற்றுக்கொண்ட பத்துலட்சம்டலர் அதிர்ஷ்டத்தில் இது அவளின் பங்காகும். அவர்களில் ஏற்கனவே ஓர் பெண்பிள்ளை இறந்துபோய்விட்டாள். அதனால் இந்தப்பணத்தை இப்போது நால்வரும் பங்கிட்டுக்கொள்ள வேண்டியவர்கள். தற்போது 21 வயதுடையவளான மரியடியோன் முன்பு ஓர்கன்னிகாமடத்தில் சேர்ந்திருந்தாள். ஆனல், பிந்த அதிலிருந்து வெளிகொண்டுவிட்டாள். இப்போது அவள் குவெபெக்நகரிலே ஓர் மடத்தைக்கொண்டிருக்கும் நற்கருணைநாதர் கன்னிகாசபையில் சேர்ந்திருக்கின்றாள். இவள் அதிலே இரண்டுவருடம் இருந்தால் தரித்திரவார்த்தைப்பாட்டுக்குஅமைந்து தனதுபங்காகிய 2,50,000 டலரையும் தியாகஞ் செய்யவேண்டியவளே.

## மனந்திரும்பிய பாதிரிமார்

சமீபத்திலே மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்ட அங்கிளிக்கன் சபைப் பாதிரிமாரான கனம். வால்ற்றன் ஹன்னை அவர்களும், கனம். கென்னெத் டெயின் அவர்களும் கருதினல் கிறிவ்வின் ஆண்டவராலே வெஸ்ற்மினிஸ்றர் அதிமேற்றிராசன மாளிகையிலுள்ள பிரத்தியேக சிற்றாலயத்தில் சென்றபுரட்டாசிமாதம் 16-ந்திகதியன்று உறுதிப்பூசுதல் அருளப்பெற்றார்கள். கனம். டெயின் அவர்கள் வெஸ்ற்மினிஸ்றர் ஆசனக்கோவிலிலே சென்ற ஆவணி மாதம் 15-ந்திகதி பரிபாலனரான வண. கோர்டன் வீலர் சுவாமியாரால் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பெற்றனர். தற்போது இவர் குருப்பட்டத்துக்குப்படிக்கத் தொடங்கியிருக்கின்றார். பாம்வீதியிலுள்ள கோவிலிலே சென்றபுரட்டாசிமாதம் 7-ந்திகதியன்று திருச்சபையில்சேர்ந்துகொண்டவரும், அங்கிளிக்கன் சபையிலே "அனன்சியேஷன் குழுவின்" செயலாளராய் இருந்தவருமான கனம். ஹன்னை அவர்கள் பிடாகுருமடத்தில் குருத்துவத்துக்கான படிப்புகளைத் தொடக்குவதற்காகச் சென்ற 16-ந்திகதி லண்டனிலிருந்து றோமாபுரிசென்றிருக்கின்றார். "அனன்சியேஷன் குழு" என்பது தென்னிந்திய சபையை அங்கீகரிக்கும் இங்கிலாந்துச்சபையின் தீர்மானத்தை எதிர்க்கின்ற உயர்தர அங்கிளிக்கன்பாதிரிமாரை அடக்கியுள்ளதாகும். இந்தக்குழுவைச் சேர்ந்த ஏனையஅங்கத்தவர்களும் கத்தோலிக்கதிருச்சபையிலே சரண்புகஆயத்தப்படுவதாகத் தெரியவருகிறது.

## மஸ்கோவின் ஒரேயொருகோவில்

சுதந்திர மேற்குஜேர்மனியின் தலைவரான டக்றர்கொன்றாட் அடெனேர்அவர்கள் சமீபத்திலே சோவியற்தலைவர்களுடன் சம்பாஷணைகள் நடத்துவதற்காக மஸ்கோநகர் சென்றிருந்தபோது, அன்றுஞாயிற்றுக்கிழமை அந்நகரிலுள்ள ஒரேயொரு கத்தோலிக்ககோவிலிலே — அதாவது பிரான்சுக்குரிய அர்ச். லூயிஸின்கோவிலிலே திவ்வியபூசைகண்டபோது, ஏறக்குறைய 300 ருஷியகத்தோலிக்கர் அங்கு சமூகமாயிருந்தார்கள். டக்றர்அடெனோர் அவர்களுடன்சென்ற மேற்குஜேர்மன் கோஷ்டியினரும் அவ்வேளை கோவிலில் இருந்தார்கள். அவர் ஏறக்குறைய முழுநேரமும் பலிபீடஸ்தானத்தின் முன்பாகப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த சிவப்புவில்லூர்திப் பட்டுமுட்டிலே முழந்தாட்படியிட்டவண்ணமிருந்தார். திவ்விய பூசைமுடிவிலே அக்கோவில் விசாரணைக்குரவரும், லாத்வியநாட்டினருமான வண. யோசெவ் புட்ரோறேவிச் சுவாமியார் முன்சென்று அவருடன் கைகுலுக்கினர்.

## "எம்முடைய இன்னிற்சர்"

ஆஸ்திரியாவின் திருச்சபை அதிகாரியாயும், வீயென்னநகர் அதிமேற்றிராணியாராயும் விளங்கியிருந்து இம்மாதம் 9-ந்திகதியன்று காலஞ்சென்ற கருதினல் தியடோர் இன்னிற்சர் ஆண்டவரின் திருமேனிஅடக்கத் திருச்சடங்குக்கென்று அவர்மரணத்தாலே கவலைகொண்டவர்களாய் அடர்ந்து நெருங்கிய மக்கள்குழாங்களால் சென்ற வெள்ளிக்கிழமைகாலை வீயென்னநகர் வீதிகளும், அந்நகரின் மத்தியசதுக்கங்களும் தேங்கிப்போயிருந்ததாகத் தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. முந்திய மூத்தினங்களிலும். 1,50,000 மக்களுக்குமேல் அதிமேற்றிராசன மாளிகையிலும், பிந்த அந்நகரின் பாரிய ஆசனக்கோவிலிலும் ஆசாரமரியாதையுடன் கருதினலாண்டவரின் திருமேனி வளர்த்தப்பட்டிருந்த ஆசந்தியின்பக்கமாக அணிவகுத்துச்சென்று அவருக்குத் தங்கள் கடைசிமரியாதையைத் தெரிவித்துக்கொண்டார்கள்; 80 வயதுடையவரான கருதினல் ஆண்டவர் கடந்த 23 ஆண்டுகளாக வீயென்னநகர் அதிமேற்றிராணியாராய் இருந்துவரலாயினர்; ஆஸ்திரியமக்களாலே 'எம்முடைய இன்னிற்சர்' என்று அன்பாக இவர் அழைக்கப்பெற்றுவந்தார்; கத்தோலிக்கரைப் போலவே கத்தோலிக்கர் அல்லாதாராலும் அதிகமாக நேசிக்கப்பெற்றுவந்தாரெனச் சொல்லப்படுகிறதென்றும் தந்திச்சமாச்சாரம் தெரிவித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐப்பசி மாதம்

**போதுக் கருத்து:** இரும்புத் திரைக்குப் பின்னாலுள்ள "மௌனதிருச்சபை"யின் குருமார், மேற்றிராணிமாருக்காக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** 'ஆள்,' பொருட் குறைவினால்—முக்கியமாக ஆபிரிக்காவில் அப்போஸ்தல தொண்டு தடைபடாதிருக்க மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
**பாதுகாவலன்**
1955-ம் ஆண்டு
ஐப்பசி மாதம் 20-ந் திகதி

## வேதப்பரப்புதல் ஞாயிறு

"நீங்கள் உலகமெங்கும் போய் எல்லாச் சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவசித்து ஞானஸ்நானம்பெறுபவன் இரட்சணியமடைவான்" என்று நமது இரட்சகர் திருவாய்மலர்ந்த அரியமொழிகளைச் சிரமேற்கொண்டு, இன்று உலகமுழுவதிலும் பரந்துகிடக்கும் வேதப்பரப்புதல் ஞானக்களத்திலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, மனந்திருப்புதலாகிய ஆத்தும இரட்சணியதொண்டாற்றி வருகின்ற மிஷனரிமார்களுக்குத் தங்கள்செபங்களாலும், தியாகங்களாலும் கத்தோலிக்கமக்கள் அனைவரும் ஒத்தாசைபுரிய வேண்டிய அருந்தினம் வருகின்றது. வேதப்பரப்புதல் ஞாயிறின் முக்கியநோக்கம், அஞ்ஞான அந்தகாரத்திலும், மரணநிழலிலும் நிர்ப்பாக்கியராய் இருந்துவருகின்றகோடிக்கணக்கானமக்களை விசுவாசத்தின் பிரகாசத்துக்கும், இரட்சணியத்தின் துறைமுகத்துக்கும் கொண்டுவருதலேயாம். வேதத்தைப் பரப்புந்தொண்டு, ஆத்துமாக்களை ஈடேற்றுந்தொண்டு. இந்தமகத்தான தொண்டிலே தனது ஞானமக்களுக்கெல்லாம் ஆர்வத்தை உண்டுபண்ணவும், அவர்களெல்லாம் அதில் சிறப்பாகப் பங்குபற்றச் செய்யவுமாகவே திருச்சபை வேதப்பரப்புதல் ஞாயிறைக் கொண்டாடுகின்றது. அதிகாரமுறையிலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, வேதத்தைப் பரப்பிவரும் குருமார் மாத்திரமன்று, சாதாரண கத்தோலிக்கரும் வேதப்பரப்புதல் வேலையில் இயன்றமட்டும் ஈடுபடவேண்டுமென்பதே அதன் பேராசையாகும். "பரலோகத்தையும், பூலோகத்தையும் படைப்பதைக்காட்டிலும் ஓர் ஆத்துமத்தை இரட்சிப்பதுதான் அதிஉன்னதமான வேலை" என்றார் அர்ச். அகுஸ்தீனார். "எவராவது ஆத்தும இரட்சணிய அவாவிலும் மேலானபலியைச் சர்வேசுரனுக்குச் செலுத்தமுடியாது" என்கிறார் அர்ச். கிறகோரியார். "நாம் ஆத்துமாக்களை மனந்திருப்பும்வேலையில் ஈடுபடும்போது யேசுக்கிறீஸ்துநாதரின் வேலையையே செய்கிறோம்" என்கிறார் அர்ச். சாள்ஸ் பறோமையார். இவற்றிலிருந்து ஆத்தும இரட்சணிய தொண்டின் காத்திரத்தை நன்றாக அறிந்து கொள்ளலாம். சிறியபுஷ்பமாகிய அர்ச். சின்னத்தெரேசம்மாளும், அவிலாவின் அர்ச். பெரியதெரேசம்மாளும் அஞ்ஞான நாடுகளுக்குச் சென்று வேதம்போதித்தவர்கள் அல்ல. ஆயினும் அவர்கள் தங்கள் இடையறாத செபத்தினாலும், தபத்தினாலும் கணக்கற்ற ஆத்துமாக்களை இரட்சித்தார்கள். ஆதலால் முதலாவது, நமது செபதபங்களாலும், இரண்டாவது, நம்முடைய உதாரமான தருமங்களினாலும் இந்த இரட்சணியதொண்டில் ஈடுபடுவோம். கிறீஸ்துநாதரின் பதிலாளியான பாப்பரசர் இந்தத்தருமங்களை நம்மிடம் எதிர்பார்க்கின்றார். நமது மனத்தாராளமான உதவியை ஆவலுடன் கேட்கின்றார். ஆதலால், அன்றுதினம் எம்மாலான தியாகங்கள்செய்து வேதப்பரப்புதலுக்கு ஆன உதவி புரிவோமாக!

## ஜனுவாரியாரின் திருஉதிரம்

அன்றுதிங்கட்கிழமை அர்ச். ஜனுவாரியாரின் திருநாளன்று நேப்பிள்ஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் மிம்மி ஆண்டவர் அவ்வர்ச்சியசிட்டரின் திருஉதிரம் மற்றும்ஓர்தரம் உருகி நீர்மயமாயிற்றென்று அர்ச். கிளேயரின் மகாலயத்தில் நின்று பிரசித்தமாக அறிவித்தபோது, ஆலயமணிகள் ஆர்ப்பரிக்க, நகரெங்கும் சனக்குழாங்கள் ஆனந்தக்கூச்சல் செய்துநின்றன. அவரின் திருஉதிரம் இருவெள்ளிக் குப்பிகளிலே இருந்துவருகிறது. அர்ச். ஜனுவாரியார் நேப்பிள்ஸ் நகரின் பாதுகாவலர். அக்காலமுதல் அவரது திருநாள்உட்பட வருடம் மூன்றுமுறை அவருடைய திருஉதிரம் உருகிநீர்மயமாகும் அற்புதம் நடந்தேறுகிறது.

**துன்பத்தை அனுபவிக்காதவர்களால் வாழ்வின் சுவையை அறியமுடியாது. துன்பநெருப்பில் புடம்போடப்பட்டவர்களே வாழ்வின் இன்பத்தை அனுபவிக்க முடியும்.**

யோசேவாஸ்முனிவர் சரித்திரத்துணுக்குகள்

[10]

## சில்லாலையிற் காணப்படும் சிலுவை

யோசேவாஸ்முனிவர் யாழ்ப்பாணத்துக்குவந்தபோது மாறுவேஷத்துடன் வீடுவீடாய்த் திரிந்து பிச்சைஎடுத்துவந்தார். ஆரம்பத்தில் அவரை இன்னாரெனஅறிவது இலகுவாய்த் தோன்றவில்லை. சிலகாலத்தால் கத்தோலிக்கர் அவர் ஒரு குருவென அறியவந்தபோது, ஒல்லாந்தரால் அவருக்கு ஆபத்துண்டாகுமென எதிர்பார்த்து அவரைச் சில்லாலை என்னும்சிற்றூருக்கு அனுப்பி வைத்தனர். அவ்வூரார்களுடைய உறுதியான விசுவாசத்தாலும், சுத்ததனத்தாலும் அவ்வூர் சின்னரோமை என அழைக்கப்பட்டது. பறங்கியர்களால் அமைக்கப்பட்ட மண் ஆலயம்ஒன்றும் அப்போது அங்கு காணப்பட்டது. அவ்வூரிலிருந்த மூப்புவுக்குக் கீழ்ப்படிந்துகொண்டே முனிவர் பல மைல்தூரம் கால்நடையாக நடந்துசென்று, பரந்த இடங்கள்தோறும் வேதவெளிச்சத்தை ஏற்றிவைத்துக் கொண்டுவந்தார். அவருடைய அமிர்தமானவாக்கியங்களைக்காட்டிலும் அவருடைய சுகிர்த நடத்தை பலரை வேதசத்தியத்துக்கு அழைத்துவந்தது. (யோ. மு. சரி. ப. 68)

யோசேவாஸ் முனிவரைப்பற்றிய வரலாறுகள் பலவற்றை நாம் அறியவேண்டுமாயின் சில்லாலையின் பழையமனிதர்கள் அவற்றை உருக்கமாகக் கூறக் கேட்கலாம். "புராதன சில்லாலையும், அதன் வேதாபிவிருத்தியும்" என்ற அழகிய சிறுநூலை எழுதிய திரு. சூ. இன்னாசிமுத்து அவர்களுடன் நான் சில்லாலையிற் காணப்படும் அற்புதசிலுவையைப் பார்க்கச்சென்றேன்.

தங்கச்சரிகையால் வேலைசெய்யப்பட்ட 'வெல்வெற்' மெத்தையின் மீது பூச்சியபயபக்தியுடன் அந்த அற்புதசிலுவை ஒருசின்னஞ்சிறுவீட்டில் வயக்கப்பட்டிருக்கிறது. செம்புஉலோகத்தால் செய்யப்பட்ட அச்சிலுவையின் நீளம் நாலரை அங்குலமிருக்கும். சாதாரணமாக நாம்காணும் சிலுவைகளைப்போல அச்சிலுவையும் ஒரேகுறுக்குச்சட்டம் வைத்து அமைக்கப்படாமல் இரண்டு குறுக்குச்சட்டங்களால் பொருத்தப்பட்டிருக்கிறது. அவற்றின் அந்தங்கள் பூவேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. அதைத் தங்களுடைய அரியபிதிரார்ச்சித சொத்தாக அவர்கள் பேணிக்காப்பாற்றி வருகின்றனர். உயிரைப்பிரிந்தாலும் அச்சிலுவையைப்பிரிய அவர்கள் தயங்குவார்கள். அச்சிலுவையால் அற்புதமாக நோயாளிகள் குணப்பட்ட வரலாறுகள்பல கூறப்பட்டுவருகின்றன. இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் நமது மூதாதையருக்கு ஞானச்சுடர்ஏற்றிய முனிவர் அவர்களின் அழியாத ஞாபகமாக அச்சிலுவை காணப்படுவது நமக்குப்பெருமையளிக்கும் விஷயமாகும்.

சிலுவையின் உரிமையைக் காப்பாற்றிவரும் சுமார் தொண்ணூறுவயதுடைய திரு. கபிரியேற்பிள்ளையவர்கள் இருகண்களிலிருந்தும் கண்ணீர்பெருகத் தமதுமுன்னோர்கள் முனிவரைப்பற்றிக்கூறியவர்த்தமானங்களை எங்களுக்கு எடுத்துக்கூறியபோது எங்கள்இருதயங்கள் பரவசமாயின.

அற்புதமான அந்தச்சிலுவையைப்பற்றிய வரலாறு மிகக் கவர்ச்சியானது. அந்நாட்களில் மாதகல் துறைதொடக்கம் திருவடிநிலை ஈறாகவுள்ள கடல்வரியை வசூலிக்கும்பொறுப்பு காயர் பிறஞ்சிப்பிள்ளை என்பவருக்கே இருந்தது. அவர் சில்லாலையில் தனவந்தராகவும், நாட்டாண்மைக்காரராகவும் இருந்து வந்தார். ஞாயிற்றுக்கிழமையைத் தவிர ஏனையநாட்களில் அவருக்குத் தலைகொள்ளா வேலைகள் இருந்தமையால், தம்முடைய வீட்டுவேலைகளை ஞாயிற்றுக்கிழமையிலேயே கவனிப்பது அவருடையவழக்கமாய் இருந்தது. இதையிட்டுப் பலமுறை முனிவர் கண்டித்தும் காயர் பிறஞ்சிப்பிள்ளையின் காதுகளில் அவை ஏறவில்லை. அவருடைய எட்டுச்சார்வீட்டை வேய்வதற்காகத் தபசுகாலத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் கூலியாட்கள்வந்து குழுமினர். வீடுவேயும்வேலை ஆரம்பமாயிற்று. முனிவருக்கு மூப்பர் இதைக் கூறியபோது அவர் மனம் வருந்தி, "அவனுடைய சம்பாத்தியம்,எல்லாம்நெருப்பாய்ப்போகப்போகிறதே!" என்றார். வீடு தீப்பற்றிக்கொண்டது. வேலையாட்கள் நெருப்புப்பிடித்தபகுதியை அகற்றிவிட்டுத் திரும்பவும் வீடுவேய ஆரம்பித்தபோது முன்போலவே தீப்பிடித்தது. இவ்வாறு மூன்றுமுறை நடைபெறவே அவருடையபொருட்கள் சேதமாயின.

உணர்ச்சிவந்த பிறஞ்சிப்பிள்ளை அப்போது முனிவரிடம் ஓடிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று குறையிரந்து மன்னிப்புக்கேட்டார். யோசேவாஸ் முனிவர் அவரை ஆசீர்வதித்து ஞாயிற்றுக்கிழமைகளில வேலை செய்யக்கூடாதெனப் புத்தி புகட்டி இந்தஅற்புதமான சிலுவையை அவர்கையிற்கொடுத்து, "இது உன்னேடிருக்கும்வரையும் உனக்கு ஒருகுறையும் வராது" என்று தேற்றியனுப்பினர். அவரும்அதை அருந்தனம்போலக் காப்பாற்றி மரணவேளையில் அதை அணைத்துக்கொண்டு தானே மரித்தார். இச்சிலுவையே அவருடைய சந்ததியாரிடம் இப்பொழுது காணப்படும் அற்புதசிலுவையாகும்.

— அழது

## நாஞ சங்கதிகள்

● சுவீடன்தேச பிரபுக்கள்குடும்பத்தைச்சேர்ந்த மாக்குவெஸ் மேரி கிறிஸ்ரின்சீமாட்டி புரொட்டெஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பிச் சமீபத்திலே றோமாபுரி, சம்பேதுருவான தர்மகாலயத்தில் கத்தோலிக்கதிருச்சபையில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றார்.

● சோவியற்ருஷியாவிலே குற்றமில்லாத ஆட்களிலே குற்றஞ்சாட்டி எவராவது கையெழுத்தில்லா ஓர்கடிதம் அனுப்பிவிட்டால் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடவும், கைதுசெய்து சிறையில் வைக்கத்தானும் சட்டமுண்டு. கையொப்பமிடாதன வாய் வன்மஞ்சாதித்து, கோள்மூட்டி அனுப்பப்படும் கடிதங்களை நம்பிக்கைக்குரியஇரகசியசெய்திகளென்று சோவியற்அரசு கொள்ளுகின்றது.

● ஸ்பானியதேச கிறனடாமாகாணத்தைச்சேர்ந்த விஸ்காா்ககரின் 80 வயதுடைய கட்டளைக் குருவானவர் அத்தேசத்திலே 80 வயதும், அதற்கு மேற்பட்ட வயதுமுடையவர்களான குருமாரின் கையொப்பங்களுடன் கூடிய வெள்ளேட்டுப் புத்தகம்ஒன்றை வருகிறபங்குனிமாதம் 2-ந்திகதியாகிய பாப்பரசரது 80-வது பிறந்தபெருநாளின்போது அனுப்பி வைப்பதற்கான ஆயத்தங்கள் செய்துவருகின்றார்.

● ஐக்கிய அமெரிக்கதேச குடிசனங்களில் நூற்றுக்கு 20 விகிதம்கத்தோலிக்கரும், 35·3 விகிதம் பல்வேறு சபைகளைச்சேர்ந்த புரொட்டஸ்தாந்தரும் இருந்துவருவதாகக் கிறீஸ்துவசபைகளின் புரொட்டஸ்தாந்த தேசிய சங்கத்தால் பிரசாரஞ் செய்யப்பெற்ற அமரிக்கசபைகளின் வருடாந்த வெளியீடு அறிக்கையிட்டிருக்கின்றது. அதனுல் ஐக்கியதேசமக்களில் ஒவ்வொரு ஐந்துபேருக்கும் ஒருவர்வீதம் கத்தோலிக்கர் இருந்துவருகின்றார்கள்.

● 1960-ம் ஆண்டிலே ஜெற்பிரயாணவிமானங்கள் ஒவ்வோர்தடவையும் 70 முதல் 125 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு நியூயோக் நகருக்கும் லண்டன்நகருக்குமிடையே அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேலாகவுள்ள 3,500 மைல் தூரத்தையும் 7 மணித்தியாலத்தில் தாண்டிவிடுமாம். அதாவது லண்டனிலிருந்து கிளாஸ்கோநகருக்கு றெயினுல்போகச்செல்லும்நேரமே அவற்றிற்கும் பிடிக்குமாம். தற்போது இவற்றின் வேகத்தில்செல்வன ஜெற்வெடிகுண்டுவிமானங்களே.

# வேதவிசுவாசப் பரம்புதலுக்கான பாப்பரசரின்சபையிலே உமது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளுக!

## நீர் இச்சபையிலே ஓர்அங்கத்தவராக இராவிடில் உடனேதானே ஓர்அங்கத்தவராகுக!

### விசுவாசப் பரப்புதற்சபை

வருடந்தோறும் உலகமுழுவதிலும் வயோதிபர்களும், பிணியாளர்களும், அநாதர்களும், குஷ்டரோகர்களுமாகச் சாதிபேதம், வர்ணபேதம், சமயபேதம் பாராட்டாது 6 கோடியே 50 லட்சம் பேரை ஆதரித்துவருகின்றது.

### விசுவாசப் பரப்புதற்சபை

3,400 மருந்துகொடுக்கும் சாலைகள், 1,900 அநாதசாலைகள், 1,200 ஆஸ்பத்திரிகள், 280 வயோதிபர்சாலைகள், 219 குஷ்டரோகர்சாலைகள், 51,000 பாடசாலைகள் என்பனவாகச் சுமார் 58,000 தருமஸ்தாபனங்களைப் பரிபாலித்துவருகின்றது.

### விசுவாசப் பரப்புதற்சபை

உலகமுழுவதிலும் குஷ்டரோகர்சாலைகள், ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், அநாதசாலைகளில் சம்பளம்பெறுமலே கதியற்றவர்களும், தரித்திரரும், நிர்ப்பாக்கியருமானபேர்களைப் பராமரித்துப் பாதுகாப்பதற்கென்று தங்களை அர்ப்பணஞ்செய்த 1,00,000 தேவஊழியர்களைக் கொண்டிருக்கின்றது. இவர்கள் ஏழைகளினதும், நோயாளர்களினதும் பாஷைகளைப்பேசி, சீவபரியந்தம் அவர்கள்மத்தியிலேயே சஞ்சரித்துவருகின்றார்கள்.

### விசுவாசப் பரப்புதற்சபை

ஒவ்வோர்விசேஷப்பட்ட சேவைக்கென்றே திறம்படப் பயிற்றப்பட்ட இந்தமிஷனரிமாருக்குச் சகலவிதமான உதவிகளையும் செய்துவருகின்றது. இவர்களிடையே ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, ஓஷியானியாமுதலாம் கண்டங்களிலே எங்கெந்தத் தேவைகள் ஏற்படுகின்றனவோ, அந்தந்தத் தேவைகளுக்கு உடனேதானே தயாராயிருக்கும் டக்றர்மாரும், நேர்ஸ்மாரும், பல்வைத்தியர்களும், ஆசிரியர்களும், கமத்தொழில் நிபுணர்களும், விஞ்ஞானிகளும் இருந்துவருகிறுககள்.

### விசுவாசப் பரப்புதற்சபை

தம்மைப்போலும் மக்களாலே ஆதரிக்கப்பட்டுவருகிறது. அவர்கள் ஓர்காணிக்கை கொடுக்கின்றார்கள், அல்லது ஓர்பரித்தியாகஞ் செய்கின்றார்கள், அல்லது செபவேண்டுதல் செய்கின்றார்கள். ஏனெனில், தங்கள் பாவங்களுக்குப் பரிகாரஞ்செய்யவேண்டுமென அவர்கள் விரும்புகின்றார்கள். அன்றேல் தாங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காக நன்றியுள்ளவர்களாய் இருக்கின்றார்கள்.

### விசுவாசப் பரப்புதற்சபை

தமது பரித்தியாகங்களை வேண்டிநிற்கின்றது. பரித்தியாகம் செய்வதென்பது நீர் விரும்புகிற ஏதோஒன்றை விட்டுக்கொடுப்பதேயாகும். இதற்கெனத் தாம் சிகரெற்றுகளையோ, சுருட்டுகளையோ, இனிப்புப்பண்டங்களையோ, சினிமாப்படக்காட்சிகளையோ, உடைகளையோ, விருந்துகளையோ, களியாட்டுகளையோ ஒறுத்துத் தியாகஞ்செய்யலாம். அவ்வாறுசெய்தால் வியெற்நாம்முதலாம் நாடுகளிலே பசிபட்டினியால் வாடும்மக்களை உணவுகொடுத்துப் போஷிக்கலாம். பீஜிமுதலாம் தீவுகளிலே குஷ்டரோகிகளின் வைத்தியசிகிச்சைக்கு உதவிசெய்யலாம். தங்களைக் கவனிப்பார் எவருமேயில்லாது தவிக்கின்ற உலகின் ஏழைமக்களுக்கு உதவிசெய்யலாம்.

இன்று உலகமுழுவதிலும் 3,60,000 கத்தோலிக்ககுருமார் இருக்கின்றனர். அதாவது, ஒவ்வோர் 1,305 கத்தோலிக்கருக்கும், 5,527 கத்தோலிக்கர் அல்லாதோருக்கும் ஒருகுருவானவர் வீதம் இருக்கின்றார்கள். அதனுல் செபத்தினுலும், பரித்தியாகத்தினுலும், பணத்தாலும் மிஷன் நாடுகளுக்கு — வேதபோதக நாடுகளுக்கு மனத்தாராளமாய் உதவிசெய்வீராக! குருத்துவத்துக்கும், சந்நியாச, கன்னிகா அந்தஸ்துக்கும் அதிகமான அழைத்தல் உண்டாகும்படியாய்ச் செபஞ்செய்வீராக!

**மிஷன்ஞாயிறு—நிகழும் ஐப்பசி 23-ந் திகதிவரும் அடுத்தஞாயிறு என்பதை மறவாதிருப்போமாக!**

## கொச்சிக்கடை, அர்ச். அந்தோனியார் கோயிலும் அந்தோனிச்சுவாமியாரும்

கொச்சிக்கடை, அர்ச். அந்தோனியார்கோயிலின் வரலாற்றைப்பற்றி என்னுல்எழுதப்பெற்ற கட்டுரையிலே அந்தோனிச்சுவாமியார் ஓர்கோவைக்குருவானவர்என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதனையான் சிலஆண்டுகளின் முன் திரு. குருப்பு அவர்கள் "கத்தோலிக்கமெசஞ்ச"ரில் எழுதியகட்டுரையில் கண்ணுற்றேன். அந்தோனிச்சுவாமியாரைத் திட்டமாக ஒருகோவைக்குருவானவர் என்று கூறுகிறதற்குச் சான்றுகள்எதுவுமில்லை. இலங்கையின் அப்போஸ்தலர் (ஒறற்ரோறியன் குறிப்புகள்) என்றநூலில் அந்தோனிச்சுவாமியார் ஒரு ஒறற்ரோறியன் என்று காணப்படுகிறது அன்றி, அவர் எந்நாட்டைச் சேர்ந்தவர்என்று குறிப்பிடப்படவில்லை.

வழிமுறைச் செய்திகளை நுணுகி ஆராய்ந்தால் அந்தோனிச்சுவாமியார் மலையாளதேசத்தைச் சேர்ந்த கொச்சியில்இருந்து வந்தவரென்று அனுமானிப்பதற்குப் பலபுறச்சான்றுகள் காணப்படுகின்றன.

மலையாளத்திலே சம்பாலூர் என்ற இடத்தில் ஒருகுருமடம் இருந்ததாகவும், அதில்இருந்து பலகுருமார் வெளிகொண்டு இருப்பதாகவும் அறியக்கிடக்கிறது. இந்தக்குருமடம் பிற்காலத்தில் திப்புசுலுத்தானுல் அழிக்கப்பட்டதாக அறிகிறேம். அந்தோனிச்சுவாமியார் இந்தக் குருமடத்தில் கனிந்த ஓர்பழமாய் இருக்கலாம்.

மேலும், சுவாமியார் கொச்சிஅந்தோனிஎன்றே அறியப்பட்டார். கோவைக்குருவானவராய் இருந்தால் அவருடையபெயர் அந்தோனியோ என்றாவது, அல்லது போர்த்துக்கேய பெயர்களைத் தழுவியாவது அமைந்திருக்கும்.

எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது, அந்தோனிச் சுவாமியாரைக் கோவைக்குருவானவர் என்பதிலும் கொச்சிக்குருவானவர் என்பதே பொருத்தமானது.

கொழும்பு, அர்ச். லூசியம்மாள் ஆசனக்கோயிலில் மலையாள மக்களின் விசாரணைக்குருவாய் விளங்கும் வண. யோசேப்புபீட்சுவாமிகள் அந்தோனிச்சுவாமியார் கொச்சியைச் சேர்ந்தவர் என்றே அபிப்பிராயப்படுகிறார். அதனுல் திரு. குருப்புஅவர்களைப் பின்பற்றிக் கோவைக்குருவானவர்என்று யான்எழுதியது தவறுகஇருக்கலாம். வரலாற்று ஆராய்ச்சியாளர் உண்மையைத் தெளிவுபடுத்துவார்களென எண்ணுகிறேன்.

—ஏ. எம். ஜே. வேதநாயகம்

● இலங்கையிலே மதுவிலக்கை ஆதரிக்கும்விஷயமாய்ச் சுவீடன்தேசம் ஓர்மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுவந்தது. ஆனுல், அத்தேசத்திலே கடந்த 35வருடகாலமாக நிலைபெற்றிருந்த மதுவிலக்கானது இம்மாதம் 1-ந்திகதி சனிக்கிழமையன்று இறுதிகண்டுள்ளது. மதுபானங்கள் விலக்கப்பெற்றநாடுகளிற்போன்று அங்கும் களவிலே மதுபானவியாபாரம் மிக மும்முரமாக நடைபெற்றுவந்தமையே அங்கு மதுவிலக்கு இறுதியடையக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதபோதக மனப்பான்மை

"வேதபோதக மனப்பான்மையற்ற கிறீஸ்துவன், கிறீஸ்துவனென்றபெயருக்கே தகுதியற்றவன். நிதிஉதவுவதிலும், பிள்ளைகளைத் தேவஅழைத்தலுக்குச் செவிசாய்க்கச் செய்வதிலும் வாழ்விலும். பேச்சிலும், சகலத்திலும் கிறீஸ்துவின் அழைப்பைப் பரப்புவதிலும் நமதுவேதபோதகம் அடங்கியிருக்கிறது"

(சேலம்மேற்றிராசன ஸ்தாபித வெள்ளிவிழாவின்போது ஸ்ரீ. எஸ். அந்தோணிமுத்து அவர்கள்நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.)

நமதுஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர் பிறந்ததும், வாழ்ந்ததும், இறந்ததும் நமது ஆசியாக்கண்டத்தில். அவருடைய அத்தியந்தசீடர்களில் ஒருவராகிய புனிததோமையார் கூடப் போதித்ததும, மரித்து அடக்கஞ்செய்யப் பட்டிருப்பதும் நமதுதேசத்தில். அவரைத்தொடர்ந்து ஆயிரக்கணக்கான குருமாரும், கன்னியரும், சந்நியாசிகளும் தங்கள்உடல், உடமை, உயிர் அத்தனையும் பணயம்வைத்து, நமது திருமறையைப் பத்தொன்பது நூற்றாண்டுகளாகப் போதித்துத்தான் வந்திருக்கிறார்கள். இருந்தாலும் கண்டபலனென்ன? உழைப்புக்குத் தகுந்த பலனில்லை. காலத்துக்கேற்ற முன்னேற்றமில்லை. இதன் காரணமென்ன? இது சிந்தித்து விடைகாண வேண்டிய கேள்வி!

காரணங்கள் பலகூறலாம். என்றாலும் ஒரேயொருகாரணத்தை மட்டுந்தான் இங்குஎடுத்துக்கூற விரும்புகிறேன். "கிறீஸ்துவன்" என்றபதத்தைப் பிரித்துப்பாருங்கள். கிறீஸ்து + அவன். ஆனால், அவன் அவனாய்த்தான் இருக்கிறான். அவன் கிறீஸ்துவாயில்லை. அவன் — கிறீஸ்து, கிறீஸ்து — அவன் என்று சொல்லும்படியாய் என்றைக்கு மாறுவோமோ, மாறி மறுகிறீஸ்துவாக என்றைக்குவாழ்வோமோ, அன்றைக்குத்தான் நூற்றுக்கு நூறு கிறீஸ்துவர்களாய் இருப்போம. அன்றைக்குத்தான் நமதுநாடு கிறீஸ்துவநாடாக மாறியமையும்.

கிறீஸ்துவன் பெயருக்கு ஏற்றாற்போல் அல்ல, பெயரளவில்தான் கிறீஸ்துவனாயிருக்கிறான். அவன் வருடப் பாவசங்கீர்த்தனம் செய்பவனாய், பாஸ்குக்கடன் தீர்ப்பவனாய், ஞாயிற்றுக்கிழமைக் கிறீஸ்துவனாய் இருக்கிறான். இத்தகையஒருவன் இல்லாமல்போனாலும் போகலாம். இப்படியிருந்தால் நமதுகனவு கனவாகவேயிருக்கும். நமதுகனவு நனவாகவேண்டுமானால் வாரத்தின் ஒவ்வொருநாளும், ஒருநாளில் 24 மணிநேரமும், ஒருமணியின் ஒவ்வொருநிமிடமும், விநாடியும் அவன் உண்மையான கிறீஸ்துவனாய், பத்துக்கற்பனை, திருச்சபைக்கட்டளைகளை அனுசரிப்பவனாய், தேவதிரவிய அனுமானங்களை அடிக்கடி, ஏன் நாள்தோறும் பெறுகிறவனாய், புண்ணியங்களைப் பேணிப்போற்றுகிறவனாய் வாழ வேண்டும்.

"இது யாரால்முடியும்? என்னால் முடியாது" என்று நினைக்கிறோம். உதட்டைப் பிதுக்குகிறோம். அப்படி நினைத்தால் நினைத்தபடி முடியாமல்தான்போகும். நல்லகிறீஸ்துவனாய், அர்ச்சியசிட்டனாய், கிறீஸ்துவின் இன்னொருபிறப்பாய், வேறொருஉருவாய் வாழமுடியுமென்று உள்ளூறநம்புங்கள். திடமாய், உறுதியாய் நம்புங்கள். மனம்போல நம்வாழ்வு மலரத்தான்செய்யும். இதற்கு உதாரணங்கள்வேண்டுமா?

மீன்பிடித்து வாழ்ந்துவந்த எளிய செம்படவர்கள் மனதைக்கவரும் சீரிய செம்மல்களாய், ஆண்டவரின் நேரடியான அப்போஸ்தலர்களாய் மாறியமைய முடிந்ததா? இல்லையா? "அறியேன், அறியேன்" என்று மும்முறை மறுத்துக்கூறிய குருதுரோகியான இராயப்பர் குருபக்தனாக, முதல் பாப்பாண்டவராக, கண்காணுக்கடவுளின் கண்காணும்பிரதிநிதியாக மாறவில்லையா என்ன? ஒருகெட்டகள்ளன் நல்லகள்ளனாக – கடைசிநேரத்திலேயே மோட்சத்தைத் திருடிக்கொண்ட பக்காப்புனிதத் திருடனாக மாறமுடிந்தது. முப்பதுஆண்டுகள் துன்மார்க்கனாய், தூர்த்தனாய், ஸ்திரீலோலனாய் வாழ்ந்துவந்த அகுஸ்தீனார் திருச்சபையில் தலைசிறந்தவராய், சிறந்தவேதபாரகர்களில்ஒருவராய் மாறமுடிந்தது. கிறீஸ்துவர்களைக் கொன்றுகுவித்த சவுல் — அப்படிச்செய்வது புண்ணியமென்று கருதியசவுல் பவுலாகமாறி, "உயிர்வாழ்வது நானல்ல; என்னில் கிறீஸ்துநாதர் வாழ்கிறார்" என்று சொல்லமுடிந்தது. சொன்னபடியே வாழவும்முடிந்தது. வீரநெப்போலியன் அன்றுசொன்னான், "முடியாது" என்றபதம் நமது அகராதியிலிருந்து உடனடியாக அகற்றப்படவேண்டுமென்று. நான் சொல்லுகிறேன், இன்று நமதுநினைவிலிருந்தே அது எடுபடவேண்டும்; எடுத்தெறியப்பட வேண்டும். நாம்ஒவ்வொருவரும் ஓர் அர்ச்சியசிட்டனாக — பிறிதொரு கிறீஸ்துவாக மாறமுடியும். வாழமுடியும். "என்பிதாவைப்போல் நீங்களும் சம்பூரணராய்இருங்கள்" என்பது மறந்துமொழிந்த வாக்கியம் அல்ல; மறக்காமற்சொன்ன வாக்கியம். மயக்கத்தில் உளறிக்கூறப்பட்டது அல்ல; முழுமதியுடன் மனப்பூர்வமாய்ச் சொல்லப்பட்டது. அதறகாகவே தேவன்மனிதனானார். மனிதனை அவர் கோதுமைஅப்பமு மாயினார்.

சுத்தஅரூபியானவர் எந்தக்கருத்திற்காக ரூபமெடுத்தாரோ, எந்தக் கருத்திற்காக விண்ணைமறந்து மண்ணை அடைந்தாரோ, எந்தஒருகருத்திற்காக உன்னததேவன் ஈனசென்ம மெடுத்தாரோ, அதையும்நீத்துக் கோதுமை அப்பமாகி நம்முடன் வாழ்ந்துவருகிறாரோ அந்தக்கருத்து நமதுஉயிரோடு உயிராய், அறிவோடுஅறிவாய், உணர்வோடுஉணர்வாய் ஒன்றிக் கலந்திட வேண்டும். மணியும் ஓசையும்போல, வீணையும் நாதமும்போல, தமிழும் இனிமையும்போல அதுநம்முடன் பின்னிப்பிணைந்து, பிரிக்கமுடியாத அளவுக்கு இணைந்து, நமதுஉள்ளத்தில் ஊறிக்கிடக்கவேண்டும். இத்தகைய ஒருமனோநிலையே வேதபோதக மனப்பான்மைஎனப்படும். இது நம்மில் இருக்கிறதா?

மனிதன் சிருஷ்டிகளின்சிகரம். அவனுடையஆன்மா கடவுளின் சாயல். அவருடைய நேரடியானமூச்சு. அந்த ஆன்மாவை நாம்கண்ணால் காணக்கூடுமாகில், அதைக்கடவுளாகவே கருதிவிடுவோம். ஏனெனில், அவ்வளவு மேன்மைவாய்ந்தது அது. அதை இரட்சிக்கக் கடவுள் என்னசெய்துள்ளார்? நாம் என்னசெய்துள்ளோம்? இனியும் என்னசெய்யலாமென்பதைச் சிறிதேனும் இதுசமயம் சிந்தித்துப் பார்ப்பது நன்மைபயக்கும்.

ஆன்மாக்களை இரட்சிக்கவே பிதாவாகியசர்வேசுரன் தமது ஏககுமாரனை இப்பூவுலகுக்குஅனுப்பினார். அனுப்பப்பட்ட அந்தத்தேவகுமாரன் ஏழையாய்ப்பிறந்து, ஏழையாய் வளர்ந்து, ஏழையாய்வாழ்ந்து, ஏழையாய்மரித்தார். எப்படிமரித்தார்? 33 வயதிலே, மலையுச்சியிலே, சிலுவைமரத்திலே, வானத்துக்கும் பூமிக்கும் நடுவிலே— பூமி அவரை வேண்டாமென்று வெறுத்துத் தள்ளியதுபோலவும், வானம் அவரைவரவேற்க மறுத்தது போலவும்—மூன்றாணிகளிலே, இடுப்பில்கட்டிய ஒரேதுணியுடன் தலைசாய்க்க எதுவுமில்லாமல், தமக்கென ஒருதுளிஇரத்தமும் ஒதுக்கிவையாமல் செந்நீர்அத்தனையும்வடித்து, தம்மைக் கொன்றவர்களுக்காகவும் தமதுஉயிரை அர்ப்பணம்செய்து, அடைபட்ட மோட்சகதவுகளை அகலத்திறந்துவிட்டார். இறைவனே நமதுஆன்மஇரட்சணியத்திற்காகத் தமது இரத்தத்தைச் சிந்தியிருக்க, நாம் — அவர் பெயரை நமதுபெயராக வைத்திருக்கும் நாம் — இரட்சணியபாதையில் இருக்கும்நாம் நமது சகோதராகிய பிறமனிதரின் இரட்சணியத்திற்காக ஒருசொட்டு வியர்வையாவது சிந்தாமல, சுட்டுவிரலைமுதலாய் அசைக்காமல், சிந்தனையில் ஒருசிறிதாவது செலவிடாமல்இருக்கலாமா?

காக்கையைப்பாருங்கள்! பூச்சி, புழு, எச்சில்இவைகளை உண்டுவாழும் அப்பட்சியைப்பாருங்கள்! ஒருசில ஆகாரப்பொருட்களை அதுகண்டதும் 'கா! கா!' வென்று கூவியழைக்கிறது, தனதுஇனத்தாரை. மற்றக்காகங்கள் பறந்துவந்து அந்த ஆகாரப்பொருட்களில் பங்கடையும்வரை காகம் கரைந்துகொண்டுதான் இருக்கும். மற்றக் காகங்கள் எதுவும வரவில்லையானால் பறந்துசென்று அழைத்துவருகிறது ஆகாரமுள்ளஇடத்திற்கு. காக்கையைவிடக் கேவலமானவர்களா நாம்? பகுத்தறிவற்ற அப்பட்சிக்குள்ள இப்பிறர்சிநேகம், இனப்பற்று, உள்ளுணர்வு நமக்குவேண்டாமா? மெய்ஞானஒளியில் வாழுகிறநாம் அஞ்ஞான இருளில்வாழும் சகோதரரை மீட்க வேண்டும் அன்றோ!

மரம் நிழல்தருகிறது. மலர் நறுமணம்வீசுகிறது. பழம் இன்பரசம் சொரிகிறது. கிறீஸ்துவன் கிறீஸ்துவத்தை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டாமா? கொடுக்காதகிறீஸ்துவனும் ஒருகிறீஸ்தவன் ஆவானா? பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும். அவனிடம் கிறீஸ்தவம் இருந்தால்தானே அதனைப்பிறருக்கு அளிக்க முடியும். வேதம்வேறு—நாம்வேறு, நம்வாக்குவேறு — வாழ்க்கைவேறு என்று வாழலாமா? வாடிக்கையாக வழக்கத்தைமுன்னிட்டு நாம் கோவிலுக்குப் போய்க்கொண்டும், வந்துகொண்டுமிருந்தால் போதுமா? வேதம் நமதுபேச்சாய், மூச்சாய், இதயத்துடிப்பாய் இருக்கவேண்டும் அன்றோ! (வளரும்)

## சதாசகாய மாதாவின் திருயாத்திரை

பரிசுத்தசதாசகாயமாதாவின் படம் ஒன்றைத்தாங்கிய பாரமானசிலுவை ஒன்றைத் தம்முடன் எடுத்துக்கொண்டு ஒருவர் ஐரோப்பியநாடுகளிலே தன்னந்தனிமையாக யாத்திரை செய்து வருகின்றார். திரு. எவெணஸ்ற் வால்ற்றர்எனப்பெயரிய ஓர் ஜேர்மனியரான இவர் சென்றமகாயுத்தத்திலே டெசோநகரில் மின்சாரத்தொழில் நிபுணராகக் கடமைபார்த்துவரும்போது, நேசநாடுகளின் ஆகாயவிமானங்கள் பயங்கரத்துக்குரியவிதமாய் அந்நகர் மீது படையெடுத்து, அங்கு மிகமோசமாகக் குண்டுமாரி பொழியலாயின. அந்தப் படையெடுப்பின்போது மிக அரிதாக உயிர்தப்பியசிலரில் இவரும் ஒருவராவர். அப் படையெடுப்பின்போது இவர் கலங்கித் தவித்துப் பரிசுத்த சதாசகாய மாதாவுக்கு ஓர்நேர்த்திசெய்தார். அதாவது தமது உயிரைப்பாதுகாத்து வைக்குமிடத்து அதற்கு நன்றியறிதலாகச் சதாசகாய மாதாவின்படம் ஒன்றை ஐரோப்பா முழுவதும் கொண்டுசெல்வதாக வாக்களித்தார். 1952-ம் ஆண்டின் "கத்தோலிக்க தினம்" அன்று ஒருலட்சம் மக்கள்கூடி நடத்திய பெரியமகாநாட்டுக்கென்று இவர் பேர்லின்நகர்சென்றார். இந்தமகாநாடு ஆவணிமாதம் 24-ந்திகதியன்று முடிவடைந்ததும் சதாசகாயமாதாவின் படத்தைத்தாங்கிய பாரமான சிலுவைஒன்றைஎடுத்துக்கொண்டு இவர் தமதுயாத்திரையைத் தொடக்கினார். அவ்வாண்டின் கோடைகால மாதங்களிலே ஐரோப்பிய வீதிகள்நீளம் இவர் ஆயிரக்கணக்கான மைல்தூரம் நடந்திருக்கின்றார். போகும்வழியிலே விடுதிகள், அல்லது குருமனைகள், அல்லது சுகாத்தியம் நன்றாயிருந்தால் வெளியிடங்களிலுந் தங்கி நித்திரை செய்கின்றார். மாரிகாலத்தில் தாம் தங்கியிருக்கும் இடங்களில் வேலைசெய்து யாத்திரைச்செலவுக்கென்று பணந்தேடிக் கொள்ளுகின்றார். இவர் இத்தாலியினூடாக ரோமைநகர்சென்று பின்னர் தென்பிரான்சினூடாகத் திரும்பி ஸ்பெயினுக்கும், பிந்தப்போர்த்துக்காலுக்கும் சென்றார். பாத்திமா, சறகோசா, கொம்போஸ்தெல்லா முதலானவற்றையும், மற்றும் பெரியதிருசேத்திரங்களையும் இவர் தரிசித்திருக்கின்றார். பின்னர் திரும்பவும் பிரான்சினுள் பிரவேசித்து லூர்துதிருப்பதியில் தங்கியிருந்துவிட்டு, வடமுகமாக விசியேபதிக்கும், பூலோனுக்கும் செல்லலாயினர். தற்போது இவர் ஒல்லாந்தைநோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார். கடைசியாகத் தமதுயாத்திரையை முடித்துக் கொண்டு இவர் வருகிறநத்தால்திருநாளின்போது திரும்பவும் பேர்லின் நகர்போய்ச்சேரத் திட்டஞ்செய்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# —: மாதாதந்த மணிமாலை :—

(Ignatios Antony, Blue Army Apostle, Rajakamangalam.)

இன்று கிறிஸ்துவஉலகில் செபமாலையைப்பற்றி அறியாதவர்கள் இல்லை. ஏனெனில், உலகமே அதன் வல்லமையை உணரத்தொடங்கி விட்டது. கிறிஸ்துவசகோதரர்கள் என்றுமில்லாத வகையிலே செபமாலையின் வல்லமையை உணர்ந்து செபிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆயினும், இதன்வரலாற்றையும், மகிமையையும் நாம் சரிவர அறியோம். அதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆதிக்கிறீஸ்துவர்கள் மத்தியில் செபங்களுடன் மலர்களைக்காணிக்கையளிக்கும் வழக்கம்இருந்தது. மாலையில்மலர்ந்த நறுமணம்வீசும் நவமான வண்ணமலர்களை மாலையாகக்கோத்து, ஒவ்வொருமலருக்கும் ஒவ்வொருசெபமாக அவர்கள் சொல்லிவந்தார்கள். மலர்கள்முடிந்ததும், செபங்களும் முடிந்துவிடும். வேதசாட்சிகளான இளங்கன்னியர் கிறீஸ்துயேசுவை விசுவசித்தஒரேகாரணத்துக்காகக் கொலைக்களம் கொண்டுபோகப்பட்டனர். அவர்கள் கொலைக்களம் செல்லும்போது, புதுமணப் பெண்களைப்போல் தங்களை அலங்கரித்துக்கொண்டு, றோசாமலர்களைத் தூவிக்கொண்டு குதூகலத்துடன் செல்வார்கள். மன்னாதிமன்னனின் திருக்கரங்களில் தங்கள் உயிரைக் காணிக்கையாக்கும் அறிகுறியாக றோசாமலர்கள் இருந்தன. விசுவாசிகள் அவற்றைப் பூச்சியத்துடன் எடுத்துச் சென்று இரவில்செபிக்கும்போது ஒவ்வொருமலருக்கும் ஒவ்வொருசெபமாகச் செபித்தார்கள். மொழிநூல் இதை நன்கு உணர்த்துகிறது. "றோசறி" என்ற (Rosary) ஆங்கிலபதம் செபமாலையைக்குறிக்கும். இது றோசாமாலைஎன்றபொருள்படும். (Rosarium) இஃது றோசறியும்என்ற இலத்தீன் மொழியின் அடிப்படையில் எழுந்தது.

மலர்கள் நமதுவாழ்வில் முக்கிய பங்குபெறுகின்றன. ஆலயங்களை அலங்கரிப்பதற்கு மலர்கள் முதலிடம் பெறுகின்றன. நமது அன்பின்காணிக்கையாக எமது நண்பர்களுக்கு மலர்மாலைகள் சூட்டுகிறோம். அன்பளிப்பாக மலர்ச்செண்டுகளை வழங்குகிறோம். "மலர்களும், குழந்தைகளும் தினந்தினம் தோன்றாவிடில் வாழ்வே சப்பிட்டுப்போகும்" என்றார் கவிஞர் தாகூர். இத்தகைய பெருமைவாய்ந்த மலர்களை நம்முன்னோர் செபங்களுக்கு உறுதுணையாக உபயோகித்துவந்தமை ஆச்சரியமல்ல.

மிகப்பழைய காலந்தொட்டுத்தானே செபமாலை உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது. ஒரேசெபத்தை மீண்டும்மீண்டும் செபிக்கும்வழக்கம் அக்காலத்திலேயே இருந்தது. பாமரர்க்கும் இதுவே சிறந்தவழியாகும். மிகப்புராதன நகராகிய நினிவேபட்டணத்திலுள்ள சிலையொன்றில் செபமாலை காணப்படுகிறது. இந்தியாவிலும் செபமாலை கையாளப்பட்டு வந்துள்ளது. நந்தமிழ் நாட்டு மன்னர்கள் நவரத்தினமணிகளால் அமைந்தசெபமாலையை மார்பில் அணிந்து "பகவதர்" என்ற மந்திரத்தைச்செபித்து வந்தனரென்றும், அதில் 104 மணிகள் இருக்குமென்றும் மார்க்கோபோலோ குறிப்பிட்டுள்ளார். ஜப்பான்தேசத்தில் புத்தர்களும் ஒருவிதசெபமாலையை உபயோகித்ததாக அர்ச். சவேரியார் குறிப்பிட்டுள்ளார். மகமதியர்களும் 33 அல்லது 66 மணிகள்கொண்ட கயிற்றைவைத்துக் கொண்டு அல்லாவின்நாமத்தைப் பல நூற்றாண்டுகளாகப் பயபக்தியோடு உச்சரித்துவந்தார்கள். எகிப்தியபாலைவனங்களில் வதிந்ததபோதனர்கள் செபங்களைக் கல்மணிகளாலும், தானியங்களாலும் எண்ணிவந்தார்கள்.

பழையகாலத்துத் தாவீதுமன்னனின் நூற்றைம்பது சங்கீதங்களை விசுவாசிகள் செபித்துவருமாறு திருச்சபைகற்பித்தது. அச்சியந்திரமில்லாத காலம்அது. அவற்றை மனனஞ்செய்தலும் எளிதல்ல. சுவிசேஷங்களையும் அக்காலத்தில் சந்நியாசிகள் கையினால்தான் எழுதினார்கள். ஒருபுத்தகத்தை எழுதிமுடிப்பதற்குப் பெருஞ்செலவும், சிரமமும் ஏற்படும். எனவே, அவற்றைக் கோவிலில் ஒருமேசையில் சங்கிலியால் கட்டிவைத்திருப்பர். விசுவாசிகள் அவற்றைக் கோவிலிலேயே வாசித்துவிட்டு வைத்துவிடுவர். பெரும் பணச்செலவில் எழுதிய அவற்றை எடுத்துச்செல்லா திருக்கும்படிதான் அவற்றைச் சங்கிலியால் பிணைத்து வைத்திருந்தனர். இதையிட்டுத்தான் "திருச்சபை சுவிசேஷங்களைக் கிறீஸ்துவர்கள் வாசியாதிருக்கும்படி பெரிய சங்கிலியால் கட்டிவைத்தது" என்று பதிதர் கதைகட்டினர். எப்படி இருக்கின்றது அவர்களின் அபாண்டம்?

இனி, அச்சியந்திரம்இல்லாத அந்நாளிலே — எழுத்தறிவற்றவர்மிகுந்த அந்நாளிலே நூற்றைம்பது சங்கீதங்களைச்செபித்தல் சாத்தியமாகவில்லை. எனவே, அவற்றைச் செபிக்க இயலாதவர்கள் அவற்றிற்குப்பதிலாக வேறு செபங்களைச் செபிக்கவிரும்பினார்கள்.

அர்ச். அப்பொல்லினாரின் சந்நியாசிகள் ஒருநாளில் இருமுறை "சுவாமி கிருபையாயிரும்" என்றமந்திரத்தை மூந்நூறுமுறை செபித்துவந்தார்கள். சத்தியதிருச்சபைக் குட்பட்ட கீழ்நாடுகளில் "அகாதீஸ்தோஸ்" (Akathisthos) என்னும் செபத்தொகுப்பு நடைமுறையில் இருந்தது. இது தேவஅன்னைக்குத் தோத்திரமான பலமனவல்லயச் செபங்களையும், திருச்சடங்கின் கீதமொன்றையும், நமதுஆண்டவரது வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சியையும் அடக்கியது.

12-ம் நூற்றாண்டின் மத்தியிலேயே "பிரியதத்தத்தினாலே பூரணமரியாயே" என்னும் மங்களவார்த்தைச் செபம் சொல்லும்வழக்கம் ஆரம்பமாகியது. அக்காலம் கபிரியேல்வானதூதனின் மங்களவாழ்த்துரையே மீண்டும், மீண்டும் செபிக்கப்பட்டது. 1221-இல் இவ்வுலகைநீத்த அர்ச். சாமிநாதரின் செபமாலையே இன்று திருச்சபையில் வழங்கப்பட்டுவருகிறது.

தென்பிரான்சில் 'அல்பிஜென்சஸ்' என்னும் பிரிவினைஏற்பட்டது அவர் நாட்களில். ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர் அதன்மாயவலையில் சிக்கினர். "மெய்விவாகம் கெட்டது; உத்தமராய் இருக்க விரும்பினால் உணவுஉண்ணக் கூடாது; சடப்பொருள்கள் அனைத்தும் தீயசக்தியினால் உண்டானவை" என்பவை அன்னாரின் கள்ளப்போதனைகள். கடுந்தபசிகளைப்போல் நடித்த அவர்களது மாயவலையில் சிக்கினர் எண்ணற்றகத்தோலிக்கர். அவர்களைத்திருப்புதல் திருமறை அதிகாரிகளுக்கு அரிதாயிற்று. அவ்வேளை இரக்கத்தின்அன்னை செபமாலையைப் புனிதசாமிநாதருக்களித்து அதன்மூலமாய் உலகின் இடரைத்தீர்த்தாள். அக்கள்ளப்பதிதமும் முற்றாக முறியடிக்கப்பட்டது இச்செபமாலையால்.

சரித்திர ஏடுகளைப் புரட்டுங்கள். 'பிளேக்' என்னும் கொடியநோய் ஐரோப்பாவில்பரவி எண்ணற்றஉயிர்களைக் கொள்ளைகொண்டகாலை, அவர்களுக்கு அபயமளித்தது இந்தஅருள்மாலை. 1571-ம்ஆண்டு லெப்பாந்தோகுடாவிலும், 1683-ம்ஆண்டு வீயென்னாவிலும் கிறீஸ்தவர்களுக்குச் செயமளித்தது இச்செபமாலை. ஐரோப்பாவின் எண்ணற்றஉயிர்களைப் பலியாக்கிய "கறுப்பு" நோயைப்போல் இன்று உலகின் எண்ணற்றமக்களது ஆன்மஉயிரைக் கொள்ளைகொள்ளுகிறது சிவப்புநோய். அதற்கு மாற்றுமருந்தை அன்னையே கூறிவிட்டாள். கையாளவேண்டியதுதான் குறை. ஆம், பாத்திமாவில்தோன்றிய நீலச்சேனையின் தலைவியாகிய தேவஅன்னை சிவப்புநோய் தீர்வதற்குச் செபமாலை செபிக்கச் சொன்னாள்.

இது விஞ்ஞானயுகம். உலகைஅச்சுறுத்தும் அணு, சலவாயுக்குண்டுகளின் யுகம். நாகரிகத்தின் உச்சியில் இருப்பதாகப் பறைசாற்றுகிறான் மனிதன். ஆதியில் துஷ்ட — தன்னிலும் வலிமைசான்ற பிராணிகளுக்கு அஞ்சிவாழ்ந்தஅவன் இன்றுகேவலம் மிகச்சிறிய அணுவுக்குஅஞ்சுகிறான். அவனோடு உலகமேஅஞ்சுகிறது. அஞ்சும் உலகத்திற்குச் சாந்திவேண்டுமா? ஆம், செபமாலைதான் — அருள்பொழியும் அம்மணிமாலைதான் சாந்திக்குவழி.

நாகரிக காலமிது. ஒருமுறைகண்டதை மறுமுறைகாண நாம் ஆசிப்பதில்லை. ஒருமுறைசென்ற பாதையில் மறுமுறை செல்ல நம்புதுமைமனம் மறுக்கிறது. இப்புதுமைமனம் வாழ்வில் என்னஇன்பத்தைக் கண்டுவிட்டது? சலிப்பும், வாழ்வில்வெறுப்புந்தான் அது கண்டபலன்கள்!

கத்தோலிக்கராகியநாம் தேவஅன்னையை — நம்நேயஅன்னையை ஒரேசெபத்தால் திரும்பத்திரும்ப வாழ்த்தி மன்றாடுவதில் சலிப்பதில்லை. ஒவ்வொருமுறையும் ஒவ்வொரு ஞானஅர்த்தம் காண்கிறோமதில். ஒருகாதலன் தன் காதலியைநோக்கி, நான் உன்னை நேசிக்கிறேன்என்று பன்முறைசொன்னாலும் அவள் அதைக்கேட்டுச் சலிப்படைவதில்லை. ஒவ்வொருமுறையும் ஒவ்வொருஅர்த்தம் கொள்ளுகிறாள், தன் காதலன் வார்த்தையிலே. ஒருஅன்னையானவள் தன்உதரக்கனிகளாகிய செல்வக்குழந்தைகள் தன்னை எத்தனைதடவை நேசிக்கிறோம்என்றாலும் வெறுப்படைவதில்லை. கட்டியணைத்து முத்தமாரிபொழிகிறாள் குழந்தைகள்மீது.

நாம் செபமாலை செபிக்கும்போது இவ்விதமே சொல்லுகிறோம். கடவுளிடம் — தேவஅன்னையிடம் நாம் நேசிக்கிறோம், நேசிக்கிறோம் என்று கூறுகிறோம். ஒவ்வொருமுறையும் இது வெவ்வேறு பொருள்படுகிறது.

செபமாலைப்பக்தியைப் பரிசுத்த பாப்புமார் ஊக்கிவந்துள்ளனர். "செபமாலை கிறீஸ்துமதத்தின் பிரச்சாரம், வேதப்பரப்புதலின் ஆயுதம்" என்றார் 7-ம்ஊர்பன். "விசுவாசிகளைக் காப்பாற்றும் பாதுகாவல் செபமாலை." இது பரிசுத்தபிதா 8-ம்கிளமென்ரின் பொன்மொழி. "இந்தவத்திக்கான் மாளிகையின் விலையுயர்ந்தபொக்கிஷம் செபமாலையே." இது நமதுஞாபகத்தில் நிலைத்திருக்கும் 9-ம் பத்திநாதரின் திருமொழி.

கொந்தளிக்கும் இவ்வுலகில் நிலையானசமாதானம் வேண்டுமா? ருஷியா மனந்திரும்ப வேண்டுமா?

**"ஆளுக்கொரு செபமாலை!**
**நாளுக்கொரு செபமாலை!"**

## வேலையின் மகத்துவம்

மனிதன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வதற்காக வேலைசெய்கிறான். தன் வேலையின் பயனை அனுபவித்துக் கொண்டே அவன் வாழுகிறான். மனித சமூகம் நிலைத்திருப்பதற்குச் சிற்சில வேலைகள் அத்தியாவசிய மானவை. தனவந்தன் சோம்பேறியாய் வாழுங் குற்றம் அதிகமாய் அவனைச்சார்ந்த குற்றமல்ல.

வேலை, பாவத்தின் தண்டனையாக மனிதன்மேல் சுமத்தப்பட்டதல்ல. வேலைசெய்யும் நிலைமையில்தான் பாவப்பழி தொட்டது. அதாவது மனிதன் கஷ்டப்பட்டு, வியர்வைசிந்தி வேலை செய்யவேண்டிவந்தது பாவத்தின்பேறுதான்.

மனிதனின் ஆத்துமசரீரநலன்களுக்காகவே தேவன் வேலையை விதித்துள்ளார். வேலையினால் ஒருவனின் ஒழுக்கம் உயர்வடைகின்றது. உலகநன்மைகள் விருத்தியடைகின்றன. தனித்தனி மனிதனின் வாழ்க்கை வளமடையச் சமூகத்தின் வாழ்க்கையே வளர்கின்றது, பூரணமடைகின்றது.

உழைப்பு — வேலை — ஒருவனது பிறப்புரிமை. இவ்வுரிமையை அவனிடமிருந்து பறிப்பது அவன் தன் இலட்சியத்தில் முன்னேறவிடாது தடுப்பதற்குச்சரி.

உழைப்பு ஒருவனதுமகிமை. இந்த மகிமை இல்லாத சோம்பல்வாழ்க்கை வெறும்வாழ்க்கை, வீணான வாழ்க்கை. உழைப்பு ஒருவனின் அம்சம். அவனுடையதத்துவங்களை வளர்ப்பது அவனதுஉழைப்பே.

இத்தகைய சிறப்புகளமைந்த உழைப்பை — அதன்உயர்வைத் தொழிற்சங்கங்கள் இழிவுபடுத்துகின்றன. விலைமதிக்கமுடியாத வேலையை விலைமதிக்கின்றன. அதாவது பொருட்களை உற்பத்திசெய்யச் சென்றசெலவின் ஒரு பாகமாகவே மனிதனின்வேலையை இச்சங்கங்கள் கணிக்கின்றன.

கிறீஸ்துநாதர் வேலைசெய்து வாழ்ந்தார். வேலைசெய்வோருக்குச் சிறந்த மாதிரிகையாய் வாழ்ந்தார். அவரின் பரிசுத்தவாழ்க்கையால் வேலையின்மகத்துவம் உயர்ந்தது. கத்தோலிக்கதிருச்சபையும் தொழிலாளருக்கு எடுத்துக்காட்டுஞ் சிறந்தமாதிரிகை, வேலைசெய்துவாழ்ந்த கிறீஸ்துவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## JAFFNA MUNICIPAL COUNCIL.

### Tenders for the Lease of Right to Collect Rents in Markets Mentioned Herein Below.

THE COMMISSIONER, JAFFNA MUNICIPAL COUNCIL invites sealed tenders for the lease of the right to Collect rents in the undermentioned markets for a period of one year commencing from 1st January, 1956.

TENDERS should be in prescribed forms obtainable from the Municipal Office.

TENDER FORMS are obtainable at this office on a deposit of:—

(1) Rs. 500/- in the case of item 1 shown below;
(2) Rs. 250/- each in the case of items 2, 3, & 4 shown below;
(3) Rs. 50/- each in the case of items 5, 6, 7, 8 & 9.

A FURTHER sum of Rs. 150/- should be deposited in the case of items 1, 2, 3, & 4 to cover up Notarial fees, stamp etc. for executing a Notarial Bond before Tender Forms are issued.

TENDER FORMS will be issued up to 11 A. M. on Saturday 5th November, 1955.

ALL TENDERS should reach this office not later than 12 noon on Saturday 5th November, 1955. The tenders should be addressed to the Commissioner, Jaffna Municipal Council, marked on the envelop "Tenders for Markets".

TENDERS will be opened at the office of the Municipal Commissioner on the same day (i. e. 5-11-1955) at 12-15 P. M. when Tenderers are invited to be present.

SEPARATE offers should be made for each market.

THE TENDERER selected by the Council in respect of 5th, 6th, 7th, 8th and 9th leases will be required to deposit within five days of such selection one third (1/3) of the tendered amount. The balance amount should be paid on or before the 1st day of December, 1955. The accepted tenderer in respect of the 1st, 2nd, 3rd and 4th leases should execute before the first day of December, 1955, a Notarial Bond hypothecating real property supplying stamps and paying Notarial fees in addition to the sum of Rs. 150/- already deposited. The balance amount should be paid in eight equal instalments on or before the 15th day of each month, the first of such payments to be made on or before the 15th day of January, 1956, subject to the conditions of lease, which are available at this office for perusal.

SHOULD any tenderer fail to deposit the amounts required and execute the bond as stated above his deposit will be forfeited and the rent will be re-sold.

THE COUNCIL reserves to itself the right to reject all or any of the tenders without assigning the reason therefor.

ANY FURTHER information may be obtained at this office.

### MARKETS REFERRED TO :-

1. GRAND BAZAAR Vegetable Market (excluding the two main permanent Market building, the Sundry Boutique erected by the Council, and the Stalls already erected with the approval of of the Council, the Tin sheds. the space of land between the road and the tin sheds the space of land allotted to the Marketing Dept. and the four unauthorised tin sheds on the North entrance of the main permanent market buildings.)
2. THE GRAND BAZAAR Fish Market (including Pannaithurai where fish is sold until such time the land is taken by the Government.)
3. THE SMALL BAZAAR (excluding all meat stalls.)
4. THE SENGUNTHAR MARKET
   (1) inclusive of the two rooms but excluding the tin shed erected with the approval of the Council.
   (2) Exclusive of the two rooms and the tin shed erected with the approval of the Council.
5. THE ARIALAI MARKET (excluding the room.)
6. THE MUTHIRAI SANTHAI (excluding the portable Boutique.)
7. THE COLUMBUTHURAI MARKET.
8. THE NAVANTHURAI MARKET.
9. THE PASSAIYOOR MARKET.

**Hudson Selvarajah,**
Acting Commissioner,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, October 18, 1955.

## யாழ்ப்பாண நகரசபை

### பின்னுற் காணப்படும் சந்தைகளில் வாடகைப்பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப் பத்திரங்கள்

பின்னுற் குறிக்கப்படும் சந்தைகளில் 1956-ம்ஆண்டு தைமாதம் 1-ந்திகதி தொடக்கம் ஒருவருடகாலத்திக்கு வாடகைப்பணம் அறவிடும்உரிமையைக் குத்தகையாகப் பெறுவதற்கான முத்திரையிட்ட கேள்விப்பத்திரங்கள் அனுப்புமாறு யாழ்ப்பாண நகரசபைக் கொமிஷனர் அழைக்கின்றுர்.

கேள்விப்பத்திரங்கள் நகரசபைக் கந்தோரில் கிடைக்கும் குறித்த மாதிரிப் பத்திரங்களில் கேட்டு அனுப்பப்பட வேண்டும்.

மாதிரிக் கேள்விப்பத்திரங்களை இக்கந்தோரிலே பின்வருமாறு பிணைப்பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கீழே காணப்படும் 1-ம் குத்தகைக்கு ரூபா 500/-
2. கீழே காணப்படும் 2-ம், 3-ம், 4-ம் குத்தகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 250/-
3. 5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம் குத்தகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 50/-

மாதிரிக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படுமுன் 1, 2, 3, 4-ம் குத்தகைகள் விஷயமாய் முத்திரைச் செலவுக்கும், பிணைஉறுதி எழுதும் நொத்தாரிஸ் செலவுக்குமாக மேலும் ரூபா 150 பிணைப் பணம் கட்டப்பட வேண்டும்.

மாதிரிக் கேள்விப்பத்திரங்கள் 1955-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5-ம்திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணி வரையும் வழங்கப்படும்.

சகல கேள்விப் பத்திரங்களும் மேல் உறையின் மேற்பக்கமாக இடது கோணத்திலே 'சந்தைகளின் குத்தகைக் கேள்விப்பத்திரம் எனத்தெரிவித்து' யாழ்ப்பாணநகரசபைக் கொமிஷனருக்கு விலாசமிட்டு 1955-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 5-ந்திகதி சனிக்கிழமை மத்தியானம் 12 மணிக்குப் பிந்தாது இந்தக் கந்தோர் வந்துசேரவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் அதேநாளிற்றானே 5-11-55 பிற்பகல் 12-30 மணிக்கு இந்தக் கந்தோரில் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமுகமாயிருக்குமாறு அழைக்கப்படுகின்றுர்கள்,

ஒவ்வொரு சந்தைக்கும் வேறுவேறுன கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.

சபையால் தெரியப்பட்ட கேள்விக்காரர் அவ்வாறு தெரியப்பட்டு ஐந்துநாளைக்குள் தமது குத்தகைக் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பங்கைக் கட்ட வேண்டியவர். மீதித்தொகை-5, 6, 7, 8, 9-ம் குத்தகைகள் விஷயமாய் முழுக்குத்தகையும் அடங்கியிருக்கும்படி 'குத்தகைகள்' 1955-ம்ஆண்டு மார்கழி 1-ந்திகதியன்று அல்லது அதற்குமுன் கட்டப்பட வேண்டும். 1-ம், 2-ம், 3-ம், 4-ம் குத்தகைகள் விஷயமாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் 1955-ம்ஆண்டு மார்கழி 1-ந்திகதிக்கு முன்னதாகத் தாம் முன்னர் கட்டிய ரூபா150 உடன்சேர்த்து முத்திரைகள் கொடுத்தும், நொத்தாரிஸ் சலாரை இறுத்தும் உண்மையான காணியை ஈடாகக் கொடுத்து நொத்தாரிஸ் மூலம் பிணைஉறுதி முடித்துக்கொள்ள வேண்டும். மீதித்தொகை எட்டுச்சம பங்குகளாகப் பிரித்து ஒவ்வோர் மாதமும் 15-ந்திகதியன்று அல்லது அதற்கு முன்கட்டப்பட வேண்டும். இதிலே முதல் கட்டுப்பணம் குத்தகை நிபந்தனைகளுக்கிணங்க 1956-ம்ஆண்டு தைமாதம் 15-ந்திகதியன்று அல்லது அதற்குமுன் கட்டப்பட வேண்டும். குத்தகை நிபந்தனைப் பத்திரங்கள் பார்வையிடுமாறு இந்தக் கந்தோரிலே கிடைக்கும்.

எந்தக் கேள்விக்காரரும் கேட்கப்படுந் தொகையைக் கட்டவும், மேற்கூறியபடி நொத்தாரிஸ்மூலம் பிணைஉறுதி முடிக்கவும் தவறுமிடத்து, அவரது பிணைப் பணம் பறிமுதலாக்கப்படும். குத்தகை திரும்ப விற்கப்படும்.

எல்லாக் கேள்விகளையும், அல்லது எந்த ஒரு கேள்வியையும் நியாயம் காட்டாமலே தள்ளிவிடச் சபைக்கு உரிமையுண்டு.

மற்றும் விபரங்களை இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

### சந்தைகள் வருமாறு

1. பெரியகடை காய்கனி மரக்கறிச் சந்தை-இருபிரதான நிரந்தர கட்டிடங்களும், சபையால் அமைக்கப்பட்ட பல சரக்குக் கடையும், சபையின் அனுமதியோடு ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலைகளும், தகரக்கொட்டில்களும், தெருவுக்கும் தகரக்கொட்டில்களுக்கும் இடையிலுள்ள வெளியிடமும், அரசாங்க விற்பனை வசதிப்பகுதிக்கென ஒதுக்கப்பட்டுள்ள வெளியிடமும், சபையின் அனுமதியின்றி நிரந்தர சந்தைக்கட்டிடங்களின் வடக்கு வாசலில் அமைக்கப்பட்டிருக்கும் நாலு தகரக்கொட்டில்களும் புறநீங்கலாக.
2. பெரியகடை மீன்கடை-அரசாங்கத்தாலே காணி எடுத்துக்கொள்ளப்படுகிறவரையில் பண்ணைத்துறையில்மீன்விற்கும் இடமும் உட்பட.
3. சின்னக்கடை-இறைச்சிக்கடைகள் எல்லாம் புறநீங்கலாக.
4. செங்குந்தர் சந்தை.
   1. இரண்டு அறைகள் உட்பட. ஆனல், சபையின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட தகரக் கொட்டில் புறநீங்கலாக.
   2. இரண்டு அறைகளும், சபையின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட தகரக்கொட்டிலும் புறநீங்கலாக.
5. அரியாலைச்சந்தை—அறை நீங்கலாக.
6. முத்திரைச்சந்தை—ஓடுகடை நீங்கலாக.
7. கொழும்புத்துறைச் சந்தை.
8. நாவாந்துறைச் சந்தை.
9. பாஷையூர் சந்தை.

ஹட்சன் செல்வராசா,
தற்காலிக கொம்மிஷனர்,
யாழ்ப்பாண நகரசபை.

நகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்,
18-10-55.

---

*இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி*

### புகையிரதக்கடவைத் திருத்தங்கள்

கடற்கரையோரப் புகையிரதப்பாதையில் வெலிகம-கம்புறுகமுவ ஆகிய இரு புகையிரதநிலையங்களுக்குமிடையே (95 மைல் 19சங்கிலி 15லிங்ஸ்) மாத்துறை கொட்டவில் - அக்குறசபீடபிளயூடி வீதி குறுக்கிடுமிடத்திலுள்ள புகையிரதக்கடவை திருத்துவதற்காக 1955-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 25-ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 10மணி தொடக்கம் மறுநாட்காலை 5 மணி வரைக்கும் மூடப்பட்டிருக்கும்.

இவ்வேளையில் எவ்விதவாகனங்களும் வெலிகம, மாத்துறைப்பகுதிகளாற் செல்லுதல்வேண்டும்,

---

### நன்றி

சதாசகாய மாதாவிடம் கேட்டுக் கொண்டமன்ருட்டுக் கிடைக்கப்பெற்றேன். அவவுடைய சகாயம் எங்கும் பிரபலியப்படுவதாக.

யாழ்ப்பாணம் பசீலியா



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

நான் பாத்திமாமாதாவை இரந்து மன்ருடியதின்பலனுக எனக்குக் காத்திராப்பிரகாரமாக ஏற்பட்ட கஷ்டத்தினின்று அதிசயவிதமாகக் காப்பாற்றப்பட்டேன். நன்றியாக இதனைப்பிரசுரிக்கிறேன். அவவின்நாமம் புகழப்படுவதாக.

சில்லாலை வெ. ஆ.

* * *

சதாசகாயமாதாவின் அளவற்ற இரக்கத்தாலும், அர்ச். சூசையப்பர், அந்தோனியார், செபஸ்தியார், பத்தாம் பத்திநாதர், பிலோமினம்மாள் இவர்களுடைய சலுகையாலும் நான்கேட்ட சகாயங்களை அடைந்தேன். இவர்கள் நாமம் புகழப்படுவதாக.

தேவதாயின் அடிமை,
A. A.

* * *

நானும், என் பத்தாவும் சுரத்தினுல் பீடிக்கப்பட்டிருந்தபோது நித்திய சகாய மாதாவுக்கு நேர்த்திசெய்து அவவை இரந்து மன்ருடினேன். இரக்கமுள்ள தாயார் என்மன்ருட்டைக் கேட்டருளினு. நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

Mrs. றெஜினு பிரான்சீஸ்

* * *

திருஇருதயநாதரின் இரக்கத்தினுலும், பரிசுத்த செபமாலைமாதாவின் சலுகையினுலும் எங்களுக்கு வரவிருந்த ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதற்கு நன்றியறிதலாக இதைப்பிரசுரிக்கிறேன்,

யாழ்ப்பாணம் M. A.

* * *

ஆத்மீகவிஷயமாய் என்மனதில் நெடுநாள் பயங்கரமும், கலக்கமும் உண்டாயிற்று. சின்னயேசுவிடமும், நான்விரும்பிய அர்ச்சியசிட்டர்களிடமும், விசேஷமாய்ப் பரிசுத்த தேவதாயாரிடமும் மன்ருடி, அத்தாயிடமே சொன்னேன், இக்கலக்கத்தினின்று என்னைக் காத்தால் நன்றியறிதலாக இதைப் பிரசுரிப்பேன் என்று.

தேவதாயார் எனக்கு உதவிஅளித்து அப்போஸ்தலிக்க கார்மேல்கூட்டத்தில் ஓர் கன்னியாஸ்திரியாகவும் என்னை அழைக்கச் சித்தம்கொண்டா. அத்தாயின் மாசற்ற இருதயத்தில் அடியாளை ஒப்படைத்து நான் தெரிந்துகொண்ட வாழ்வில் நிலைமையும், பிரமாணிக்கமும், பரிசுத்ததனமும் உடையவளாகச் சீவிக்க உதவிஅளிக்கும்படி வேண்டி என்நன்றியைத் தெரிவிக்கிறேன்.

சிசிலியா மரியாம்பிள்ளை

---

வெளிவந்துள்ளது !

சதாசகாய மாதாவை நோக்கி
**நவதின வேண்டுதல்**


இப்புத்தகம் எம்மிடம் தற்போது விற்பனைக்கு ஆயத்தமாயிருக்கின்றது. தேவையானோர் மேல்வரும் விலாசத்திற்பெற்றுக் கொள்ளலாம்.

பிரதி விலை சதம் 10.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 20-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எங்கள் பாடசாலை

'ஜெயம்'

அன்பு கனியும் சாலை—தூய
அறிவு பொழியும் சாலை
இன்பம் விளையும் சாலை—அது
எங்கள் பாடசாலை.

●

கதைகள் கூறும் சாலை—எங்கள்
களைப்பை ஆற்றும் சாலை
இதயம் மலரும் சாலை—அது
எங்கள் பாடசாலை.

●

எண்ணை அறியும் சாலை—பல
எழுத்தை அறியும் சாலை
பண்ணின் இனிமை தவழும்
—சிறு
பாலர் பாடசாலை.

●

உண்மை காட்டும் சாலை—உயிர்
ஒழுக்கம் ஊட்டும் சாலை
வண்மை கூட்டும் சாலை—எமை
வளர்க்கும் பாடசாலை.

●

ஓடி ஆடும் சாலை—நாம்
உடல் வளர்க்கும் சாலை
கோடி கோடி நன்மை—தேடிக்
குவிக்கும் பாடசாலை.

## அறிவுச் சுடர்

✼ நியூயோக்நகரிலிருந்து அத்திலாந்திக் சமுத்திரத்தின்மேலாக லண்டன்நகருக்குப் பிரயாணஞ்செய்யும் ஓர் ஆகாயவிமானம் எத்தனைமைல்தூரம் பறந்துசெல்லவேண்டும்?

3,500 மைல்தூரம் பறந்துசெல்ல வேண்டும்.

✼ ஓர் ஆகாயவிமானத்திலே பிரித்தானியிலிருந்து அத்திலாந்திக்சமுத்திரத்தை முதன்முதலாக ஓரேமூச்சில் தாண்டி அமெரிக்காபோய்ச் சேர்ந்து உலகப்பிரசித்திபெற்ற விமானிகள் யார்?

அல்கொக், பிறவுண் என்ற இரு விமானிகளுமே. இவர்கள் 1919-ம் ஆண்டு விக்கேர்ஸ் விமிஎன்ற வெடிகுண்டுவிமானத்திலே 1,890 மைல் தூரத்தையும் 16 மணித்தியாலம் 12 நிமிஷத்தில் தாண்டினார்கள்.

✼ உலகசரித்திரத்திலேயே அதிகம் நீண்ட பந்தையஓட்டம் நடத்திய கார்கள் எவை?

1908-ம் ஆண்டு நியூயோக்நகரிலிருந்து பரீஸ்நகருக்கு ஓடிச்சென்ற ஆறுகார்களுமே. இவைகள் நியூயோக் நகரிலிருந்து சான்பிரான்சிஸ்கோ, ஜப்பான், விலாடிவஸ்ரொக், மஸ்கோ, பேர்ளின்வழியாகப் பரீஸ்நகருக்குச் சென்றன. ஆனால், மூன்றுகார்களே பந்தையஓட்டத்தைச் சரிவரமுடித்தன. தோமஸ் பிளேயர்எனும் அமெரிக்கரே இதில்வெற்றிபெற்றார். இவர் 13,000 மைல்தூரத்தை 88 நாட்களில்தாண்டினார்.

✼ உலகில் மிகப்பெரிய புஷ்பம் யாது?

சுமேத்திராதீவின் "றவ்விள்சியா" எனும் மரத்தின்புஷ்பமே உலகில்மிகப் பெரியதென இதுவரை அறியப்பட்டுள்ளதாகும். இது சராசரியாகமூன்று அடி குறுக்களவுடையது.



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

அடுத்த ஞாயிறு விசுவாசப் பரப்புதல் ஞாயிறு. இது உலகெங்கும் கொண்டாடப் படுகிறது. இதன் கருத்தென்ன?

"நீங்கள் உலகத்தின் எத்திசைக்கும் போய்ச் சுவிசேஷத்தைப் போதியுங்கள்" என்று யேசுநாதர் கொடுத்த கட்டளையைத் திருச்சபை நிறைவேற்றி வருகிறது. திருச்சபைக்கு இது கட்டளை. திருச்சபை என்னும்பொழுது குருமார் மாத்திரமல்ல, விசுவாசிகளாகிய நீங்களும் இது உங்கள்மேற்சுமந்த கடமையென்று உணர வேண்டியது. இதை நினைவூட்டுவதுதான் விசுவாசப் பரப்புதல் ஞாயிறு.

நீங்கள் இதுவிஷயத்தில் செய்யவேண்டியது என்ன? வேதவிருத்தி வேலைக்குச் செபம் அவசியம். செபம் தேவ வரப்பிரசாதத்தைத் தரும். பிறசமயிகள் வாழும்நாடுகளில் சுவிசேஷத்தொண்டுபுரியும் குருமார், சந்நியாசிகள், ஆசிரியர், உபதேசிகள் முதலானோருக்குத் தேவஉதவி அவசியம். அவர்களுடைய ஊழியத்துக்கு இடையூறுகள் பல. பலன் கொடாதபொழுது மனச்சோர்வு வரும். இவ்வேளைகளில் அவர்களுக்கு உறுதியும், ஊக்கமும் கொடுக்கத் தேவவரம் அவசியம்.

யேசுவின் பாடுகளும், மரணமும் எமக்கு இரட்சணியந் தந்தன. இந்தஇரட்சணியம் மற்றவர்களுக்கும் கிடைக்க நாமும் கிறீஸ்துநாதருடன் பாடுபடவேணும். சிறுசிறு ஒறுத்தல்களைச் செய்து பிறருக்கு உதவவேண்டும். ஒறுத்தலைத் தேடிப்போக வேண்டாம். நாளாந்த சீவியத்தில் தன்கடமையை அனுசரிக்க, பொறுமையாய் நடக்க, பிறர்குறைகளைச் சகிக்க அநேக தருணங்கள் உண்டு.

வெறுங்கை முழமிடாது. வேதத்திற் சேருகிறவர்கள் ஆராதனைநடத்தக் கோவில் வேண்டும். பிள்ளைகள் படிக்கப் பாடசாலை வேண்டும். பிறருடைய தொந்தரவிருந்தால், வேலைசெய்ய முடியாவிட்டால், வியாதியாயிருந்தால் உதவிதேவை. இதற்குக் குருவானவரையே எதிர்பார்க்கிறார்கள். நீங்கள் தாராளமாய்க் கொடுத்தால்தான் குருவானவர் உதவலாம்.

எமது மேற்றிராசனத்திலே புதுக்கிறீஸ்தவர்கள் உள்ள இடங்கள் பலஉண்டு. நீங்கள் உங்கள் வகுப்பாருடன் சேர்ந்து இவ்விடங்களில் ஒன்றைத் தெரிந்து அவ்வூர்க் கிறீஸ்துவர்களுக்காகச் செபித்து, ஒறுத்தல்செய்து தருமங்கொடுங்கள்.

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## நான் தான் கருதினால்!

சிலவருடங்களின்முன் டபிளின் பட்டணத்தில் பிரயாணி ஒருவன் ஒரு வாடிவீட்டில் வருத்தமாய்க் கிடந்தான். குருவானவருக்குச் செய்தியனுப்பப் பட்டது. "கும்" மென்ற இருள்நிறைந்த இரவு. காற்று புயலாய் வீசியது. மழையும் விடாமல் பெய்தது—அல்லது கொட்டியது. குருவானவர் கால்நடையாக வந்து கடைசித் தேவதிரவியஅனுமானங்களைக்கொடுத்தார்.

அவ்வாடிவீட்டின் முதலாளி கத்தோலிக்கன் அல்ல. குருவானவர் மழையையும், புயலையும் பாராமல் வந்ததைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, "மூப்புச்சுவாமியும், விசுப்பாண்டவரும் சுகமாய் வீட்டிலிருந்து குளிர்காய்வார்களே" என்று கூறினான்.

"நீர் சொல்வது பிழை" என்றார் குருவானவர். "ஏனோ?" என்று கேட்டான் முதலாளி. "ஏனென்றால் நான்தான் பட்டணத்துக்கருதினால்"

வியாதிக்காரரை எவ்வளவு கவனத்துடன் திருச்சபை கண்காணிக்கிறது என்று கருதினால்ஆண்டவரின் ஊழியம் காட்டுகிறது அல்லவா!

## எனது ஆசை

"பாதுகாவல"னின் சென்றவார இதழிலே 'பாலர்' பக்கத்தில் "எனது ஆசை" என்ற தலையங்கத்தின் கீழ் எழுதியிருந்த பாடல் எனது உள்ளத்தைக் கவர்ந்தது. தங்கள் வேண்டுகோளை நிறைவேற்ற முன்வந்து பின்வரும் பாக்களைப் பாடி அனுப்புகிறேன்.

பெற்ற தாயைப் போலும் நாட்டைப்
பேணிக் காக்க ஆசை
கற்ற நல்ல நண்பர் தம்மைக்
கண்டு பேச ஆசை

●

கற்ற வாறு பூவில் வாழ்ந்து
காட்டு தற்கும் ஆசை
வெற்றி மீது வெற்றி ஈட்ட
வேண்டு மென்றும் ஆசை

●

தேவன் யேசு பாதம் நாளும்
தேட நல்ல ஆசை
சீவி யத்தில் தான தர்மம்
செய்ய நல்ல ஆசை

●

தேவ தாய் உவந் தளித்த
செல்வ மாலை தன்னை
ஆவ லாய்ச் செபித்து வாழ
அள விலாத ஆசை.

பி. சவிரியான் வங்காலை.

* * *

அண்ணா! தங்கள் கேள்விக்கு இசைந்து தங்கள் ஆசைப்படி எனது ஆசைப்பாக்களைப் பாடி அனுப்புகிறேன்.

1

ஆசை, ஆசை எந்தன் ஆசை
அண்ணா கேட்ட வாசை
பாச முள்ள தாய்த் தமிழில்
பாட நல்ல ஆசை.

2

அண்ணா! அண்ணா எந்தனுக்கு
அகிலம் சுற்ற ஆசை
மண்ணின் இன்பக் காட்சி கண்டு
மகிழ நல்ல ஆசை.

3

அருமை யாகப் பெற்றுப் பேணும்
அன்னை தந்தை காண
குருவு மாகி என்றும் எங்கள்
குலத்தை மீட்க ஆசை.

அ. கிறிஸ்தோப்பர், சில்லாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தைக்கு விருந்தாகும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வையில்தொங்குபவர் சுயஞ்சீவியரான சர்வேசுரனின் சுதனல்ல, ஒருசுத்தப் பொய்யன்; நிர்வாணியாய் நிந்திக்கப் படுபவர் நித்தியதேவனல்ல, தேவதூஷணஞ்சொன்ன தேவதுரோகி என்பதே கிறீஸ்துநாதரைப்பற்றிய யூதரின் அபிப்பிராயம். சிலுவையில்தொங்குகின்ற மனுஷீகத்தை அவர்கள் கண்டாரேயன்றிச் சம்மனசுகள் துதிக்கின்ற தேவத்துவத்தை அவர்கள்காணவில்லை. பரமண்டலத்துக்கும், பூமண்டலத்துக்கும்இடையில் தொங்குகின்ற பரம ஏழையை அவர்கள் கண்டாரேயன்றிப் பரலோகமும், பூலோகமும் பணிந்து வணங்கும் பரமசுதனை அவர்கள்காணவில்லை. இவர்களுடைய அறியாமையைக்கண்டு அநுதாபப்படுகிறார் அக்குயினுதோமையார். சிலுவைமீது மனுஷீகமாவது காணப்பட்டது; ஆனால், சிறியஅப்பத்துண்டில் அதுதானும் காணப்படவில்லையே என்னும்கருத்தமைய,

"தெய்வீகம் மாத்திரஞ் சிலுவையில்மறைந்தது; மனுஷீகமும் இன்றே மறைந்து நிற்குது" என்று மறைந்த தேவனை மனமார வாழ்த்துகின்றார். இன்னும் "பார்வை, பரிசம், உரிசியாவும் மாயஞ்செய்யுது கேள்வி ஒன்றே தேவன்என்று உறுதிகொள்ளுது" என்று தமது நான்குபொறிகளும், நான்குபுலன்களும் தம்மை ஏமாற்ற, கேள்விஒன்றே தம்மைத் தேற்றுகிறதென்று தேறுகின்றார்.

(தொடரும்)

## மாத்தளை, அநாதர்விடுதித் திறப்புவிழா

கடந்த 3-10-55 திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு மாத்தளை அரசாங்க அதிபர் திரு. ஏ. எல். பெரேரா அவர்களால் இங்கு அநாதபாலியர்க்கான விடுதிஒன்று திறந்துவைக்கப்பட்டது. அதனைக் கண்டிமேற்றிராணியாரான பேணுட் றெஞ்ஞோ ஆண்டவர் அவர்கள் ஆசீர்வதித்தார். பின்னர் அதிசங். சகோதரர் மரியஜோசப் எவ். பி. எம்., அரசாங்க அதிபர் திரு. ஏ. எல். பெரேரா, பிரக்கிராசியார் திரு. ஜே. எல். தம்பிராஜா, பட்டினசங்கதலைவர் திரு. ஆர். எதிர்மன்னசிங்கம், திரு. வி. ஏக்கநாயக்க, பாதுகாவல்அதிகாரி திரு. ஏ. கந்தையா, மகாவங். கண்டி மேற்றிராணியாண்டவர் முதலியவர்களால் இந்தவிடுதிச்சாலையின் அவசியம், பலன்கள் என்பனபற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. கடைசியில் சங். சகோதரர் டபிள்யு. எஸ். பீரிஸ்அவர்கள் நன்றியுரைகூறியதோடு சிற்றுண்டி வழங்கப்பட்டுத் தேசீயகீதத்துடன் விழா இனிதுமுடிவடைந்தது. இவ்வநாதர்சாலை மாத்தளையிலுள்ள மரியாயின் பிரான்சீஸ்கன்சபைச் சகோதரர்கள் எடுத்துக்கொண்ட அரும்பிரயாசையின் சின்னமாகக் காட்சியளிக்கின்றது. இச்சபையார் பல தனவந்தர்களினதும், பிரமுகர்களினதும் அழியா அன்பையும், உதவியையும்பெற்று அரைகுறையாய் முடித்து இதன் திறப்புவிழாவைக் கொண்டாடியகாரணம், இவ்விடுதி திறக்கப்படமுன்னரே அநாதசிறுவர்கள்அறுவர் இடம்பெற்றுவிட்டதும், இன்னும்அநேகர் இடத்துக்குக் காத்திருப்பதுமேயாம். கட்டடவேலையில் நாலில்ஒருபங்குமட்டுமே முடிவடைந்துள்ளது. ஆதலால், எஞ்சியபகுதியை முடிப்பதற்குச் சகல தருமசீலர்களினதும் உதவியை அவர்கள் வேண்டிநிற்கின்றார்கள். மேலும் இதுவரை உதவிசெய்தசகலருக்கும் சபையார் தங்கள் மனமார்ந்தநன்றியைத் தெரிவிக்கின்றார்கள்.

— நிருபர்

## அர்ச். தெரேசம்மாள் திருநாள் வங்காலை

வங்காலை, இளம்பெண்மணிகளின் பாதுகாவலாளியான அர்ச். சின்னத் தெரேசம்மாள் திருநாள் சின்னமலரின் பக்திச்சபையாரால் வழமையிலும் அதிசிறப்பாய் இம்முறை கொண்டாடப்படலாயிற்று. இதற்கென வங்காலை, சந்தாஞள்ஆலயம் மலைநாட்டுப் புஷ்பங்களால் அலங்கரிக்கப் பெற்றுச் சிறந்த காட்சி அளித்தது. மத்தியபலிபீட ஸ்தானத்தின் ஓர்புறமாக அழகிய மாலைகளாலும், மலர்களாலும் சோபிதமுற்றுவிளங்கிய சிறுபீடம்ஒன்றில் அர்ச். சின்னத்தெரேசம்மாளின் திருச்சுரூபம் வைக்கப்பட்டிருந்தது. 1-ம் திகதி சனிக்கிழமைமாலை எம்புதியகட்டளைக்குரவர் வண. ஜே. நீக்கலஸ் சுவாமியவர்களால் மாலை ஆராதனை பாடப்பெற்று மறுநாள் பெரியபாடற் பூசையும் நிறைவேறியது. பின்னர் கடந்த ஒன்பதுவருடகாலமாக இப்பக்திச்சபையைப் பரிபாலித்துவந்தவரும், சமீபத்தில் எம்மைவிட்டுப்பிரிந்தவருமான வண. எஸ். கோமெஸ் சுவாமியவர்கள் உயிலங்குளத்திலிருந்து வரவழைக்கப்பெற்று, அன்று சாயந்தரம் அவரையும் புதிய கட்டளைக்குரவரையும் மத்தியாகக்கொண்டு, திருச்சுரூப மேடையைச் சபையார் புடைசூழ்ந்து நிற்கப் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது. அதன்மேல் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்நடந்து திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்துடன் திருநாள்முடிவெய்திற்று.

— ஸ். ஆனுள் சில்வா.

## காவலூர்க் கடிதம்

**ஜப்பானிய நெற்செய்கைமுறை:**

ஊர்காவற்றுறையிலுள்ள இரண்டாவது இளம்உழவர்கழகமாகிய கரம்பன், இளம்உழவர்கழகம் தீவுப்பகுதி விவசாயபோதனுசிரியரின் வேண்டுகோளுக்கிணங்கி ஜப்பானியமுறைப்படி நெல்செய்கை நடத்திக்காட்டி ஏனைய கமக்காரருக்கு ஒருதூண்டுதலும், மாதிரிகையுமாக ஒருகாணியைத் தெரிவுசெய்து நெல்விதைக்க ஆரம்பித்துள்ளது. இக்கழகம் தோட்டக் காய்கனிசெய்தல், கோழிவளர்த்தல், நல்ல இனமான கால்நடைகளை அபிவிருத்திசெய்தல், குடிசைக்கைத்தொழில் ஆகியதொழில்களிலும் ஈடுபட்டுளது.

**ரூபா 13,000 லாபம்:**

தீவுப்பகுதி ஐக்கியபண்டகசாலைகளின் சமாசம் பலவருடங்களாக நட்டமடைந்து வந்தது. ஆயின் இவ்வருடம் 1-4-54 முதல் 31-3-55 வரை அதற்கு 13,000ரூபா லாபம் கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது.

**மெலிஞ்சிமுனையின் தேவைகள்:**

கரம்பன்தெற்கிலிருக்கும் மெலிஞ்சிமுனைஎன்ற புதுக்குடியேற்றப் பகுதிக்குச்செல்லும்பாதை அவலநிலையில் கிடக்கிறது. மாரிகாலத்தில் பாவனைசெய்ய முடியாது. மக்கள்கஷ்டப்படுகிறார்கள். இப்பாதையைக் கிராமச் சங்கம்வெகுவிரைவில்திருத்தி அமைத்துக் கஷ்டத்தை நீக்கும்படி வேண்டுகிறேன். புதிதாகக்கட்டப்படும் வீடுகள் வேயப்படாதிருப்பதால் மாரிகாலத்தில் அவர்கள் ஒதுங்குவதற்கு இடமின்றிச் சஞ்சலப்படுவார்கள். ஆகையால், வீட்டுவேலைகளை அரசாங்கம் விரைவில் செய்துகொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**பெற்றோர்தின விழா:**

சுருவில், கத்தோலிக்க கலவன்பாடசாலையில் 9-10-55-இல் பெற்றோர்தின விழா இனிதேநடைபெற்றது. நாரந்தனைக் கட்டளைக்குரவர் தலைமைவகித்தார். கொழும்புத்துறை ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைஅதிபர் வண. எம். மரியாம்பிள்ளைசுவாமியார், தீவுப்பகுதி வித்தியாதரிசி கமலநாதன், பண்டிதர் ஆசிநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அதன்மேல் பரிசளிப்பும், "தியாகம் அல்லது சூழ்ச்சியின் வீழ்ச்சி" என்னும்நாடகமும் நடைபெறலாயின.

**பனம்பழ ஜாம்:**

யாழ்ப்பாணவட்டார இளம்விவசாயிகளுக்கு ஆலோசனை கூறுபவராகிய திரு. வி. சுப்பிரமணியம்அவர்கள் கரம்பன் இளம்விவசாயிகளின் ஆதரவில் ஜாம், பழரசம்ஆகியன தயாரிக்கும் முறையைக் காட்டிக்கொடுத்தார். அப்பொழுது விளாம்பழரசம், தக்காளிப் பழஜாம், பனம்பழஜாம் முதலியன அவரால் செய்துகாட்டப்பட்டன. மாதிரியாக ஒவ்வொன்றிலும் ஒரு போத்தல் தீவுப்பகுதிக் காரியாதிகாரிக்குக் கொடுக்கப்பட்டது.

"யோபு"

## பிரிவுஉபசார விழா

வற்றுப்பளைக் கத்தோலிக்க பாடசாலைத் தலைமைஆசிரியராயிருந்து கடந்த 14வருடகாலமாகச் சிறந்த தொண்டாற்றிய திரு. வே. றிச்சேட்அவர்கள் இளைப்பாறுவதை முன்னிட்டுப் பெற்றோர் – பழையமாணவர் – ஆசிரியசங்கம் சென்ற 12-10-55 புதன்கிழமை அவருக்கு ஓர் பிரிவுஉபசாரவிழா நடாத்தியது. அன்றுபிற்பகல் 5 மணியளவில் தலைவர், சி. சின்னையாஅவர்களும், தனுதிகாரி ச. குலசேகரம்அவர்களும், வண. கட்டளைக்குரவரையும், பிரியாவிடை நாயகரையும் மோட்டார்வாகனத்திலே வற்றுப்பளைச் சந்திக்கு அழைத்துவரவே, திரு. க. கதிரவேலு, திரு. க. பஞ்சாட்சரம்என்பவர்கள் இருவரையும் மாலைகள்சூட்டி வரவேற்று நிற்க, பாலியரின் கோலாட்டத்துடனும், பாவோசையுடனும் பெற்றோர், பழையமாணவர், பிரியாவிடைநாயகரின் இனபந்துக்கள் புடைசூழ்ந்துசெல்லப் பத்தி,புத்தி, சித்திஎனும்மூன்றுமன்றத்தவர்களாலும் அழகுற அலங்கரிக்கப்பெற்றிருந்த பந்தர்களூடாகப் பவனி நடைபெற்றது. மேடையை அடைந்ததும், தலைவர் சி. சின்னையா அவர்களின் தலைமையில் கடவுள்வணக்கத்துடன் பிரியாவிடை வைபவம் ஆரம்பமாயிற்று.

மூந்தப் பாடசாலைமாணவர்களால் பிரியாவிடைக்கீதம் படிக்கப்பெற்றதும் மாணவன் சி. சிவபாலசிங்கம் பிரியாவிடைப் பத்திரம் பாடிவழங்கினர். [illegible] அந்தோனிப்பிள்ளை ஆங்கிலத்திலும், மாணவி நா. அன்னப்பிள்ளை தமிழிலும் அன்புபொங்க ஆசிரியருக்கு நன்றித்துதிகூறினர். ஆசிரியர் வ. அருமைநாயகம்அவர்கள் பிரியாவிடைநாயகரின் அன்பையும், நிர்வாகத் திறமையையும் வியந்து பேசியதும் மாணவர்மாணவிகள் அன்பளிப்புகள் வழங்கினர்கள்.

அதன்மேல் பெற்றோர் – பழைய மாணவர் சார்பாகத் திரு. பொ. அந்தோனிப்பிள்ளை அவர்கள் பிரியாவிடைப்பத்திரம் படித்துவழங்க, திரு. சி. விஞசித்தம்பி, திரு. க. பஞ்சாட்சரம், திரு. சி. தம்பையா நொத்தாரிஸ், திரு. சி. சபாபதிஎன்பவர்கள்பிரியாவிடைநாயகரின் கல்விகேள்விச் சிறப்பையும், முக்லைத்தீவுக்கு அவர்ஈட்டியுள்ளபுகழையும் எடுத்துக்காட்டினர். காரியதரிசி திரு. ஆ. பொனிப்பாஸ் பொற்கிழிவழங்கியபின் வண. கட்டளைக்குரவர்நம் நாயகர் மிஷனுக்குச்செய்த அரியதொண்டைவிதந்துபாராட்டி ஆசீர்ந்ததும், பிரியாவிடைநாயகர் எழுந்து, தம்மைக்கல்வித்துறையில்வளர்த்தமிஷனுக்கும், ஊரிலேயேசேவைபுரிய வசதியளித்த வண. மனேஜர்சுவாமியவர்கட்கும், மற்றும் வண. கட்டளைக்குரவர் அவர்கட்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்சங்கத்தினர்கட்கும், பழையமாணவர்கட்கும் தமதுஆழ்ந்தநன்றியைத்தெரிவித்துப்பிரியாவிடைபெற்றார். பின்னர் தேநீர்விருந்து நடைபெற்றது. ஈற்றில் பாடசாலைமாணவர் மாணவிகளால் எவரும் மெச்சத்தக்கவிதமாக ஓர்கதம்பக் கச்சேரி நடைபெற்றது.

காரியதரிசி ஆ. பொனிப்பாஸ்அவர்கள் நன்றித்துதிகூறியதும் பிரியாவிடைவிழா நிறைவாயிற்று.

— நிருபர்

## தீவுப்பகுதிச் சங்கீதவிழா

சென்ற 15-10-55 சனிக்கிழமை மாலை ஊர்காவற்றுறை, அர்ச். அந்தோனியார்கல்லூரிமண்டபத்தில் தீவுப்பகுதிச் சங்கீதவிழா சிறப்பாகநடைபெற்றது. இவ்விழாவில் தீவுகளின் பல பகுதிகளிலிருந்தும் 25 பாடசாலைகள் பங்குபற்றின. விழாமுடிவில் நாரந்தனை ஆண்பாடசாலைக்கு "மெய்காவலர்" என்ற நாடகத்திற்கு முதற்பரிசாக வெள்ளிக்கிண்ணம் அளிக்கப்பட்டது. இரண்டாவது பரிசுக்கிண்ணத்தை ஊர்காவற்றுறை, அர்ச். அந்தோனியார் தமிழ்ப்பாடசாலை பெற்றுக்கொண்டது.

— நிருபர்

## சிலாவத்தையும் சங்கீத விழாவும்

முல்லைத்தீவுவட்டாரச் சங்கீதவிழா 15-10-55-இல் இவ்வட்டார வித்தியாதரிசி திரு. எம். இராசசுந்தரம் அவர்கள்தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சிலாவத்தைக் கத்தோலிக்க பாடசாலையும் பங்குபற்றிக் கூட்டுப்பாட்டிற்கும், நடனத்துக்குமாக இரு வெள்ளிக்கிண்ணங்களைப் பரிசில்களாகப் பெற்றுக்கொண்டது. இப்பாடசாலை தற்போதைய தலைமைஆசிரியர் திரு. எச். திருச்செல்வம்அவர்கள் வந்ததின்பின் கல்வி, ஒழுக்கம் முதலியவற்றில் மேலும் வளர்ந்துகொண்டு வருகிறதைக்கண்டு ஊரவர்கள் பெரிதும் சந்தோஷப்படுகிறார்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

— நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org